1290

ஜூன் 1935. மலர் 12—இதழ் 6.

வருஷ சந்தா ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்.

## பொங்கிய காதல் ::

அல்லது **மங்களபாரதி**

துப்பறியும் நாவல்

அதிகாரம்

18. ஏழைக்கு உதவுதல் ஆழியினும் பெரிதே
19. துயரப் பதுமை—உயரிய தலைவி
20. செப்பறியாத் துயரம்—துப்பறியும் வீரர்.

—————

இரண்டு புதிய நாவல்கள் வெளிவந்துவிட்டன

பட்டமோ பட்டம் ::
அல்லது காலத்தின் கோலம்

சுகுண பூஷணம் ::
அல்லது அற்ப புத்தியின் அவதி

[illegible] கினி" ஆபீஸ்
[illegible] த் தெரு,
[illegible] ணி சென்னை

2 அணா

OFFICE OF THE ... 12 DEC 1935
3L
[illegible],N22 Jm
N35.12.6
182977

# "சுதேசமித்திரன்" மதிப்புரை

(வாரப்பதிப்பு 19-5-35.)

## பட்டமோ பட்டம்

அல்லது

## காலத்தின் கோலம்

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியுள்ள இப்புதிய நாவல் நூதனமானது. இவர் ஏற்கனவே பல நாவல்களை எழுதிப் பேரும் புகழும் பெற்றிருக்கிறார். நமது பார்வைக்கு வந்துள்ள நூல் தற்கால நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பதால், அவர் எய்தியுள்ள பேரையும் புகழையும் இது விருத்தி செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை எதிர்கால வாழ்க்கையை உத்தேசித்து எத்தனையோ மேன்மையை எதிர்பார்த்துப் படித்த படிப்பையும், பெற்ற பட்டத்தையும் வீணாகும்படி செய்வதையும், வறுமையையும் தீராத மனத்துயரத்தையும் அது அளித்து பல யுவர்களைப் பித்தர்களாக்கி விடுவதையும், உத்தமர்களைச் சித்தம் சிதறி அதமத்தில் புகுத்தும்படி செய்வதையும், நீதிவான்களை அநீதியையே நீதியாகக்கொள்ளச் செய்வதையும் ஒரு நாவலாக எழுதியிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதே. இந்நூலாசிரியர் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணங்களையும், அதனால் அவதிப்படுபவர்கள் செய்யும் கொடூரச் செயல்களையும், வேலையின்மையைப் பரிகரிக்க ஒரு திட்டத்தையும் கதைப்போக்கில் காட்டியிருப்பது இப்பிரச்னையிலீடுபட்டவர்கள் படித்தற்குரியவை.

படாடோபமற்ற வாழ்க்கையில்தான் அமைதியும், திருப்தியும், சந்தோஷமும் ஒன்று கூடியிருக்கும் என்று காட்டி இந்நூலை ஆசிரியர் முடித்திருக்கிறார். ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் நாம் அனுபவத்தில் காணும் பல விநோதங்களைக் குறிப்பிட்டுப் புத்தகத்தின் சிறப்பை விருத்தி செய்திருக்கிறார். இந்த நாவலை ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டியது.

விலை அணா 10 சந்தா நேயர்களுக்கு அணா 8

---

## சுகுண பூஷணம் : :

அல்லது

## அற்ப புத்தியின் அவதி

எனும் ஸ்வாரஸ்யமான நாவல்

விற்பனைக்குத் தயார் — விலை அணா 4.

12 அணா முன்பண மனுப்பித் தபாற் செலவின்றி
2 நாவல்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

### "ஜகன்மோகினி" ஆபீஸ்.

26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி சென்னை.

இதற்குள் இச் செய்தி காற்றுபோல முழுதும் பரவிவிட்டது. கோதண்டத்தின் பந்துக்களும் இதரர்களும் கூட்டங் கூட்டமாக வந்துவிட்டார்கள். 'ஐயையோ, அனியாயமே! இதென்னடா அக்ரமம்! அடே, கோதண்டம்! அடி கோதாவரி! உங்கள் தலைக்கு என்னடி இப்படிப் பேராபத்து வந்துவிட்டது. தெருவிலே அலையும் பிச்சைக்கார நாய்க்கு ஆதரவு காட்டினதற்கு உங்கள் தலையில் மலை புரண்டுவிட்டதே. இந்தப் பாவி முண்டையால் உன் குடித்தனத்திற்கு அனர்த்தம் வந்துவிட்டதே. ஐயோ! எங்கள் வயிறு பற்றி எரிகின்றதே. அடி கோதாவரி! நீ எத்தனையோ சமத்தாயும், சாமர்த்தியசாலியாயுமிருந்தும், இந்த கெட்டுப்போன குச்சுக்காரக் கழுதையால், கொலைக்காரப் பாதகியர்ல் ஏமாந்து மோசம்போய்ப் பாழாய்ப்போய் விட்டாயே! இந்த ஆபத்திற்கு என்ன செய்வது?'' என்று அடித்துக் கொண்டு தாறுமாறாகப் பிதற்றுகின்றார்கள்.

18297

சுறுக்கென்று அம்புகள் தைப்பதுபோல, தன்னைப்பற்றி இழிவாகக் கூறுவதைக் கேட்ட காமுவின் உள்ளம் எப்படித்தான் தத்தளிக்கும்! தத்தளித்து உருகும் உள்ளத்திற்கு எப்படித்தான் சமாதானம் சொல்லமுடியும்? பரிதாபகரமான பார்வையோடு அங்கு அவ்வாறு கூறியவர்களை நோக்கி 'பெரியோர்களே! புண்ணியாத்துமாக்களே! தாங்கள் நினைக்கின்றபடி நான் கள்ளி அல்ல; கபடியல்ல; கொலைப்பாதகியல்ல; நான் ஒரு பாபமும் அறியாத நிரபராதி என்பதை எல்லாம் வல்ல அந்த இறைவன் ஒருவன்தான் அறிவான். எனக்கு இவ்வளவு கதி வந்ததற்குக் காரணம் இதோ இந்தப் படுபாவி சண்டாளனால்தான் என்பதை அறியுங்கள். இன்றைக்கு நான் சொல்லுவது அகம்பாவத்தினாலோ, பித்துப் பிடித்ததனாலோ என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பது உண்மையாயின், சத்தியத்திற்கு அழிவில்லை என்பது உண்மையாயின் , இன்றைக்கில்லாவிட்டாலும் 'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்றுகொல்வான்' என்ற பழமொழிப்படிக்கு என்றைக்காவது அவ்வுண்மையை அறிந்துகொள்ளப்போகின்றீர்கள் என்பதை நிச்சயமாக நம்புங்கள். 'பெண் வதை வீண் போகாது' என்று பெரிய ஆவேசம் கொண்டவள்போலக் கூறினாள்.

கோகிலத்தின் கையிலிருந்த தன் குழந்தையை வாங்கிக் கட்டியணைத்து முத்தமிட்டுத் தாங்கமாட்டாத அபாரமான துக்கத்துடன் புலம்பினுள். "சீ! இந்த பாசம் எனக்கு எதற்கு? நீ யாரோ நான் யாரோ? உன்னைக் கண்டு நான் ஏன் புலம்பவேண்டும்? மனம் பதற வேண்டும்? உள்ளம் உருகவேண்டும்? சீ இந்தா" என்று குழந்தையைக் கோகிலத்தினிடம் கொடுத்து, "கோகிலா! புலம்பாதே; தைரியமாக இரு. இக் குழந்தை உன்னுடையதுதான். உன்னுடைய மங்களம் உனக்கே சொந்தம். என்னுடைய விதி எனக்கே சொந்தம்." என்று கூறியவண்ணம் இரும்பும் இளகிக் கல்லும்கரையும்படியும் கண்டோர் பிரமித்துக் கலங்கும் வண்ணமும் புலம்பிக் கொடிபோல் துவண்டு கோதாவரியம்மாள்மீது சாய்ந்தாள்.

வீதியில் தேர்க்கூட்டம், திருநாள் கூட்டமாகக் கூட்டம் கூடி தம்தம் மனப்படிக்குப் பலவாறு பேசிக் கண்ணீர் விட்டார்கள். பிறகு போலீஸார் கோதண்டத்தையும், காமுவையும் தாம் கொண்டு வந்த லாரியில் ஏற்றிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். போலீஸ் தர்பாரையும், அட்டகாசத்தையும் ஒரு நாளும் கண்டறியாத கோதண்டத்துக்கு இன்னதென்று புரியாத ஒரு விதக் குழப்பமும் திகிலும் உண்டாய்விட்டன.

காமுவையும் அவரையும் தனித்தனியே வைத்துவிட்டார்கள். போலீஸாரின் வழக்கப்படி முதல் விசாரணையும் வாக்குமூலமும் நடந்தன. கோதண்டம் ஒரே தீர்மானமாக 'நான் ஒரு குற்றமும் அறியாத நிரபராதி. பிச்சை யென்றவர்களை துச்சமாகப் பேசியனுப்பாமல் உணவு கொடுக்கவேண்டிய கடமைப்படி நான் அப் பேதைப் பெண்ணை ஆதரித்தேனே அல்லாது நான் அவளைக் குற்றவாளியென்று அறிந்தோ அல்லது அதை மறைக்கவோ நான் செய்யவில்லை" என்று தன்னுடைய தீர்மானமான வாக்குமூலத்தைக் கொடுத்தார். போலீசார் இவர் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டு அவர்கள் வழக்கப்படி விசாரணை நடத்தி "இவரை லாக்கப்பில் வை" என்று ஆர்டர் செய்துவிட்டார்கள்.

உடனே இரண்டு ஜவான்கள் வந்து இவரை ஒரு தனித்த

அறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். அந்த நிமிடம் வரையில் தனக்கு இத்தகைய கதியும் சம்பவமும் நேரும் என்று கனவிலும் நினைக்காத கோதண்டத்துக்கு இந்தப் பயங்கர நிலைமையைக் கண்டதும் அபாரமான விசனம் பொங்கிவிட்டது. சாகரத்தின் அலைகளைப்போல பலவிதமான எண்ணங்களால் உலப்பப்பட்டு, புலம்பியவாறு ஈசனைத் தியானித்தபடி சமாதியிலிருக்கும் சாமியார்போல கலக்கமே உருவாய் உட்கார்ந்துவிட்டான்.

போலீஸார் காமுவையும் தனிமையில் விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அவளையும் ஸ்திரீகளுக்கென உள்ள ப்ரத்யேகப் பகுதியில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். காமுவுக்கு இத்தகைய பெரும் கொலை செய்த பழி தன் மீது எப்படி வந்ததென்றே தெரியவில்லை. தங்கள் வீட்டிற்கு வந்த கிழவியைக் கொலை செய்ததாகக் கூறுவதால் அதை நம்பவே முடியவில்லை. அவளை வீட்டிலேயே தள்ளிவிட்டுத் தாம் வெளியேறிவிட்டது அவளுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. தாங்கள் வெளியே வந்த பிறகு அவள் எப்படி இறந்திருக்கக்கூடும் என்கிற ஓர் பெரிய மனக்கிளர்ச்சியுண்டாகி அதைப் பற்றியே பலவிதமாக யோசனை செய்துத் தவிக்கின்றாள். இடையிடையே குழந்தையை நினைத்தும், கோகிலத்தை எண்ணியும் பெருமூச்சு விட்டுக் குமுறுகிறாள். தன்னை யாதரித்ததற்காக அந்த வீட்டு எஜமானனுக்குற்ற பேராபத்தை எண்ணிப் பதைபதைத்தாள். எது செய்து என்ன பயன்?

தனது துயரம் சற்று தீர்ந்து தனக்கு நல்ல காலம் பிறக்கும்—பிறந்துவிட்டது—என்று எண்ணிச் சந்தோஷப்படுவதற்குள் இத்தகைய பெருங் கொலைப் பழி தன்மீது வந்து தாங்கிவிட்டதைக் கண்டு அவளால் சகிக்கவே முடியவில்லை. தனக்குற்ற விபத்தைவிடத் தன் பொருட்டாகக் கோதண்டத்திற்கு வந்த விதியை எண்ணித் தான் அதிகமாகத் துக்கித்தாள். தனக்கும் தன் குழந்தைக்கும் ஜீவாதாரமாக இருந்தவர்களுக்குத் தான் எமன் போலாகிவிட்டதை எண்ணி எண்ணி மனம் புண்ணாகிக் கண்ணீரை ஆறாகப் பெருக்கித் தத்தளிக்கின்றாள்.

காற்று ஓடுவதுபோல அன்றும் மறு தினமும் ஓட்டமாக ஓடி விட்டன. காமுவுக்கு வேளாவேளைக்கு ஒரு மொத்தை சோறும், தொவரைக் கொட்டையும் கீரை வேரும் போட்ட குழம்பும் எல்லாக் கைதிகளுக்கும் போடுவதுபோல இவளுக்கும் போட்டுச் செல்வதைத் தவிர வேறு ஒரு தகவலும் தெரியவில்லை. இவளைப் போன்று வழக்கு முடியாத சில கைதிகள் அங்கு இருக்கின்றார்கள். அவர்களுடன் பேசவோ அங்கு இருக்கவோ, நம்முடைய காமுவுக்கு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. இந்நிலைமையில் தவித்துத் தண்ணியாய் உருகுவதைத் தவிர வேறு என்ன செய்வாள் பாவம்! தலைவிதியை யெண்ணி வீற்றிருந்தாள்.

அச் சமயம் காமுவை யாரோ பார்க்க வந்திருப்பதாக வார்டர் காமுவிடம் தெரிவித்து அவளை வெளியில் அழைத்துச் சென்ருர்கள். கைதிகளைப் பார்ப்பதற்கென்று அமைத்துள்ள இடத்தில் கோகிலமும் அவள் தாயாரும், குழந்தை மங்களத்துடன் வருத்தமே வடிவாக உட்கார்ந்திருந்தார்கள். அலங்கோலமாக வரும் காமுவைக் கண்டதும் கோதாவரி அம்மாளும் கோகிலமும் தம்மை மறந்து புலம்பிவிட்டார்கள். "அம்மா! காமு! குழந்தையை எண்ணி நீ என்ன ஏங்கிப்போயிருப்பாயோ யென்று, அதிகாரிகளின் உத்திரவு பெற்று குழந்தையை எடுத்துக்கொண்டு வந்தேன். கவலைப்படாதே. அழாதே. கோகிலத்தின் பிதாவையும் பார்த்துவிட்டு வந்தேன். இதற்கு வேண்டிய பரிகாரத்தை நான் தேடி இந்த வழக்கில் உண்மையைக் கண்டு பிடிக்காமல் இருக்கப்போகிறதே இல்லை. இந்த ஜன்மத்தில் நீயும் நானும் ஏதோ அயலாராக இருந்தபோதிலும் பூர்வ ஜன்மத்தில் நமக்குள் ஏதோ பந்தத்வம் இருந்திருக்க வேண்டுமென்பதை நான் உறுதியாக நம்புகிறேன். ஆதலால்தான் உன்மீது என்னை யறியாது ஒருவித பாசம் உண்டாகிறது. அடிக்கடி உன் குழந்தையை நான் கொண்டுவந்து காட்டுகின்றேன். குழந்தையை நான் உன் கண்ணை போன்று பார்த்துக்கொள்கின்றேன். பகவானை நம்பி அவன் கருணையைக் கோரி பஜித்துக்கொண்டு இரு!'' என்று தேறுதல் மொழிகளைக் கூறினாள்.

ஏற்கெனவே புலம்பித் தவிக்கும் காமுவுக்குத் துக்கம் இன்

னும் கரை புரண்டுவிட்டது. "அம்மணி! நான் மலையளவு பாவம் செய்திருந்தபோதிலும் கடுகளவு புண்ணியம் செய்திருக்கிறேன் என்பதை உங்களுடைய ஆதரவு கிடைத்த அன்றே தெரிந்துகொண்டேன். இக் குழந்தையைப் பற்றி எனக்கு யாதொரு கவலையும் இல்லை. தங்களுடைய பாதுகாப்பில் இருப்பதைவிட இவ் வனைதைப் பரதேசியாகிய என்னிடத்தில் இருந்தால் அது சுகப்படுமென்று நான் நினைப்பேனா? ஒருபோதும் இல்லை. இது என்னுடைய குழந்தையே அல்ல. இது தங்களுடைய குழந்தை. இது கோகிலத்தின் விளையாட்டுப் பதுமை. இப் பாவியின் பொருட்டாகவும் இக் குழந்தையின் பொருட்டாகவும் நான் சிறிதளவுகூடக் கவலை கொள்ளவில்லை. உபகாரம் பெற்ற சண்டாளி என்னால் அபகாரமுற்ற தங்கள் பர்த்தாவுக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்ததை எண்ணித்தான் என் மனம் தத்தளிக்கின்றது. அந்த ஒரே கவலையினால்தான் அலைகடல் துரும்பென அலைகின்றேன்." என்று கண்ணீர் பெருக்கியவாறு கூறினாள்.

தன் குழந்தையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற ஆவல் அதிகமாகயிருப்பினும், ஜெயில் அதிகாரிகள் குழந்தையை அருகில் கூடக் கொண்டுபோகக் கூடாதென்று கடின உத்திரவு போட்டுவிட்டதால் காமு எட்ட இருந்தே பேசினாள். குழந்தையைப் பார்த்தாள். கண்ணீர் வடித்தாள். இதற்குள் நேரம் ஆய்விட்டதென்று அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்துடன் காமுவைச் சிறைச்சாலைக்குள் கொண்டுபோய் கோதாவரியையும் வெளியில் அனுப்பிவிட்டார்கள்.

அங்கிருந்து புறப்பட்ட கோதாவரி நேராகத் தன் வீட்டை நோக்கி வண்டியில் செல்லலானாள். அப்பொழுது வழியில் ஒரு இடத்தில் ஏராளமான கூட்டம் நிறைந்திருந்தது. ஏதோ திருவிழா நடப்பது போன்ற சின்னங்கள் தெரிந்தன. ஜே! ஜே! என்ற கரகோஷமும் காதில் விழுந்தது. இதைக் கண்ட சின்னஞ் சிறுமியாகிய கோகிலம் இங்கு என்னவென்று அறிவதற்கு ஆவலுற்று வண்டிக்காரனை அனுப்பி விசாரித்து வரச் செய்தாள். குழந்தையின் ஆவலைத் தடுக்கக்கூடாதென்ற எண்ணத்துடன் கோதாவரி அம்மாளும் அதற்கிசைந்தாள்.

சென்று விசாரித்து வந்த வண்டிக்காரன், "அம்மா! இது ஒரு பெரிய ஜமீந்தாரின் பங்களாவாம். ஜமீந்தாரினுடைய எதிரிகள், ஜமீந்தாரின்மீது ஆத்திரத்தினுல் பொய் வழக்கொன்று ஜோடித்து அவரை ஆபத்தான நிலைமைக்கு ஆளாக்கிவிட்டார்களாம். இம் மாதிரியான வழக்குகளில் உண்மையை ஆராய்ச்சி செய்து நிஜக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் மகா நிபுணத்துவம் வாய்ந்து அபார வல்லமையும் சக்தியும் படைத்த துப்பறியும் வீரசிங்கம் ராஜாராம் நாயுடு என்ற ஒரு பெரியாரிருக்கின்ருராம். அவர் இந்த வழக்கிலும் கலந்துகொண்டு வேலை செய்து ஜமீந்தார் மீதுள்ள பழியைக் களைந்து உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து போலீஸார் வசம் ஒப்புவித்து, ஜமீந்தாருக்கும் பெரிய ஜயத்தை உண்டாக்கினுராம். அதற்காக அந்த மஹானுபாவனுக்கு தம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்து இன்று பெரிய விருந்து செய்கின்ருர்களாம். இரவு விருந்திற்கு முன்பு அவருடைய வீரதீரத்தைப் பாராட்டி ஒரு கூட்டம் நடக்கின்றது. எல்லோரும் அவரைப்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டேயிருக்கின்ருர்கள். அந்தத் துப்பறிபவர் வெகு சாவதானமாக ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிருர். அதுதான் இங்கு கூட்டம். வேறு ஒன்றுமில்லை அம்மா! நம்முடைய எஜமானன் வழக்கிலும் அந்த புண்ணியாத்மாவின் தயவையும் ஒத்தாசையையும் நாடினுல் நமக்கும் ஜயம் கிடைக்குமல்லவா? அந்தப் புண்ணியவானைப் பார்க்கும்போதே எனக்கும் அதுதான் தோன்றுகிறது'' என்று எஜமான விசுவாசத்தோடு கூறினுள்.

இதைக் கேட்ட எஜமானியம்மாளுக்கும் கோகிலத்திற்கும் ஒரு விதமான சந்தோஷமும் மனத்தில் பரபரப்பும் உண்டாயிற்று. 'வீராசாமி! நீ விஷயத்தைச் சொல்லும்போதே என் மனத்தில் அதுதான் பட்டது. உலகத்தில் இப்படியும் ஒரு பெரியார் இருக்கின்ருரென்று நான் இதுவரையில் கேட்டதில்லை. நமக்கு நல்ல காலத்திற்குத்தான் இப்பேர்ப்பட்ட விஷயத்தை இங்கு நேரில் கண்டோம். அந்த மஹானுபாவனை நாம் எங்கு காணலாம். விவரம் ஒன்றும் தெரியவில்லையே. நீ மீண்டும் சென்று விசாரித்துக்கொண்டு வருகிருயா?'' என்ருள்.

இதற்குள் கோகிலம் பரபரப்புடன் எழுந்து 'அம்மா! சரியான சமயம் நேர்ந்திருக்கும்பொழுது அதை விட்டு விட்டு விசாரித்துக் கொண்டு வருவதும், பிறகு வீட்டில் போய்ப் பார்ப்பதும் எதற்காகக் காலதாமதம் செய்யவேண்டும்? நானே இப்பொழுது நேரில் அவரிடத்தில் ஓடி 'எங்கப்பாவையும், எங்கக்காவையும் காப்பாற்ற வேண்டும்.' என்று முறையிடுகிறேன். நான் சிறு பெண்ணானதினால் என்னை உடனே கவனிப்பார்'' என்று சொல்லிக்கொண்டே அம்மாவின் உத்திரவையும் எதிர் பாராமல் மங்களத்தையும் தூக்கிக் கொண்டு, அந்தக் கூட்டத்தினுள் புகுந்து வண்டிக்காரன் காட்டியபடி நாயுடு அருகில் சென்று 'ஐயா! பெரியவரே! இங்கு யாரையோ நீங்கள் காப்பாற்றினீர்களாம். என் தகப்பனாரையும் என் அக்காவையும் இதே மாதிரி நீங்கள் காப்பாற்றவேண்டும். எங்கப்பாவை வேண்டுமென்று போலீஸார் இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதோ என் தாயார் வந்திருக்கின்றாள். விவரமெல்லாம் அவள் சொல்லுவாள். இந்தச் சின்ன குழந்தையின்மீதும் என்மீதும் தயவு செய்யவேண்டும்'' என்று அழுதுகொண்டே கூறினாள்.

அங்குள்ள ஏனையோரும் இது ஏதோ கூட்டத்தை வேடிக்கை பார்க்க ஒரு சின்னப் பெண் வருகிறதென்று நினைத்தார்கள். அபாரமான விசனத்துடன் புலம்பியவாறு இச் சிறுமி கூறிய மொழிகளைக் கேட்டவுடன் எல்லோரும் பிரமித்தார்கள். தலை வலியும் சங்கடமும் பட்டவர்களுக்கன்றோ தெரியும்' என்பது போல இதுகாறும் அபாண்டப் பழியினால் அவஸ்தைப்பட்டு வாடி வருந்தித் துடித்து கடைசியில் விடுதலை பெற்று அபார சந்தோஷத்தை அடைந்த ஜமீந்தாருக்கு இச் சிறுமியின் வார்த்தை மனத்தில் தைத்தது. ''ஐயோ! நம்மைப்போலல்லவோ இச் சிறுமியின் பிதாவும் துடிதுடிப்பார்' என்று நினைக்கும்போது அவர் அங்கம் நடுங்கியது. அவர் வேகமாகக் கோகிலத்தின் அருகில் வந்து, ''அம்மா! நீ எங்கிருந்து வருகிறாய்? உன் பிதாவின் பெயர் என்ன? நீ எங்கிருப்பது?'' என்று பல கேள்விகளைக் கேட்டவாறு, கோகிலத்தைத் தட்டிக்கொடுத்தார்.

இத்தனை கேள்விகளுக்கு அச் சிறுமி எப்படிப் பதில் சொல்ல முடியும்? தன் தாயின் வரவை எதிர் நோக்கி அந்தப் பக்கம் பார்த்த

படியே "ஐயா! அதோ அங்கு என் தாயார் வண்டியிலிருக்கிறாள். அவர்கள் வந்ததும் பதில் சொல்லுவார்கள்' என்றாள். இதைக் கேட்ட எல்லோரும் அந்தப் பக்கமே பார்த்தார்கள்.

அதே சமயம் ஏதோ தடதடவென்று கீழே விழுந்த சப்தம் கேட்டது. உடனே சிலர் ஓட்டமாக வீதிப் பக்கம் சென்று பார்க்கையில் வீதியில் பெரிய மோட்டார் பஸ் ஒன்று வேகமாக ஓடி வந்ததைக் கண்டு மருண்டுவிட்ட இந்த வண்டி மாடு வண்டியைத் தாறுமாறாக இழுத்துக்கொண்டு போய் ஒரு பள்ளத்தில் தள்ளிவிட்டதை யறிந்து எல்லோரும் திடுக்கிட்டு நடுநடுங்கிப் போய் "ஐயோ! அந்த அம்மாள் விழுந்துவிட்டார்களே!" என்று கத்தினார்கள். இக் குரலைக் கேட்ட மற்றவர்களும் ஓட்ட ஓட்டமாக வீதிக்கு ஓடி வந்தார்கள். தன் தாயார் வண்டியோடு விழுந்துவிட்டாள் என்பதைக் கேட்ட உடனே கோகிலம் "அம்மா! அம்மா! வென்று அலறிக்கொண்டே ஓடி வந்தாள். இந்த பரிதாபகரமான காட்சியைக் கண்ட எவர் மனம்தான் உருகாது?"

## 19-வது அதிகாரம்

### துயரப் பதுமை—உயரிய தலைவி

உலகத்தில் எத்தகைய மனிதர்களாயினும் எக்காலத்திலும் ஒரே நிலையான இன்பமோ அல்லது துன்பமோ அடைய முடியாது. அபாரமான இன்பம் அனுபவிப்பது போலத் தோன்றிய அடுத்த நிமிடம் அத்தனைக்கத்தனை துன்பத்தின் மத்தியில் இருக்கச் செய்துவிடும். இது சகஜமான உலக இயல்பு.

அலைகடல் துரும்பென நிலை கலங்கி அலைந்து தவித்துக் கொண்டிருந்த நமது பாரதிக்கு பெருந்தன்மையான ஓர் தலைவியின்

உதவியும், உத்தமப் பெண்களின் சஹவாசமும், அருமையான ஆச்ரமத்தின் வாழ்க்கையும் ஒன்றுகூடிக் கிடைத்து கவலையை மறந்து உல்லாசமாகப் பொழுது போக்கிக்கொண்டு இருக்கும் சமயம் திடீரென்று இடி இடித்தது போலத் தன் உயிரினும் இனிய காதலனுக்கு மண்டையிலடி பட்டுப் பிராணபத்து நேர்ந்துவிட்ட தென்பதைப் படித்தவுடன் இதுகாறும் சந்தோஷமாக யிருப்பதாக நினைத்திருந்த தெல்லாம் பொடி சூர்ணமாகப் போய் பெருங் கவலைக் கடலில் மூழ்கிவிட்டாள்.

சில நிமிடங்கள் வரையில் உயிரற்ற சவம் போல விருந்தாள். இவள் மட்டும் தனித்து ஓர் மரத்தடியில் இருந்தபடியால் இவளு டைய இந்த நிலைமையை சடுதியில் யாரும் கண்டுகொள்ள முடியா மற் போயிற்று. அந்த விஷயத்தை இரண்டு மூன்று முறை திருப் பித் திருப்பிப் படித்தாள். இப் பத்திரிகை எந்தத் தேதியில் வெளி யாயிருக்கிற தென்பதையும், இராஜசேகரனுக்கு எந்தத் தேதியில் அடி பட்டதென்பதையும் கூர்ந்து கவனித்ததில் தான் எந்தத் தேதி யில் பிரயாணம் செய்தாளோ அதே நாளில்தான் அடி பட்டிருப்ப தாகத் தெரிந்து கொண்டாள். 'ஐயோ! அப் பாழும் வாணீ புரத்திற்கு அவர் எதற்காகச் சென்றார்? அங்கு மகா பாவியாகிய என்னைத் தவிர வேறு யாரும் தெரியாதே! என்னுடைய கதியை அறியாமல் என்னைத் தேடிக் கொண்டல்லவோ வந்திருப்பார்?

ஹா! ஈசா! எனக்கு தற்போது ஒன்றுமே தெரியவில்லையே! என்னுருயிர்க் காதலர் என் பிராண வல்லபர் அந்தப் பாழும் ஊருக் குச் சென்று அங்கு மகா பாவி நானில்லாததைக் கண்டு என்ன ஏங் கினரோ? என்ன நினைத்தாரோ, திடுக்கிட்டாரோ? மோசக்காரி, கள்ளி, கபடி! எனக்குத் தகவல் கொடுக்காது எங்கேயோ போய் விட்டாள் என்று என்னென்ன விதமாக எண்ணினரோ! யார் மூலம் எத்தகைய தகவலை யறிந்தாரோ! அடாடா! இவ்விதமான கலக் கத்தை அவர் என்றைக்காவது அடையக்கூடும் என்று எதிர் பார்த் தது சரியாகிவிட்டதே.

திருடனுக்குத் தேள் கொட்டியது போல என்னுடைய இந்த நிலைமையை நான் யாரிடம் கூறுவேன்? எப்படி வெளியிடுவேன்...

ஈசன் தோன்றாத் துணையாக எனக்கு இந்த ஆசிரமத்தைக் காட்டி உதவி, இந்த புனிதவதியான தலைவியின் துணையையும் கொடுத்தாரே! இச் சமயத்தில் என்னுடைய இந்த ரகஸிய விஷயம் தெரிந்தால் என்னை என்ன வித்யாசமாக நினைத்துவிடுவார்களோ! விகற்பமாகக் கூறி விடுவார்களோ? என் விதி இம்மாதிரியாகத் தவிக்கும் நிலைமையிலிருப்பினும் என்னருமைக் காதலர் சவுக்கியமாக இருந்தால் போதும் என்று எண்ணி என்னையே தேற்றிக்கொண்டு வந்தேனே? இம்மாதிரி அவருக்கும் ஓர் விபத்து எற்பட்டுவிட்டதையறிந்து வருந்த நேர்ந்துவிட்டதே! ஜகதீசா! அவருக்கு ஒரு குறைவுமின்றிக் காப்பாற்றவேண்டும் என்னப்பனே! மகா பாவி என் மீது அவர் அன்பு கொண்டதால்தான் என் காற்று அவருக்கும் அடித்து இக் கதி வந்துவிட்டது.'' என்று தனக்குள் பலவிதமான எண்ணங்களால் உலப்பப்பட்டு அப்படியே இடிந்துவிட்டாள்.

அதிகமாக சந்தோஷப்படுபவர்களுக்கும் துக்கத்திலேயே மிதப்பவர்களுக்கும் தன்னை மறப்பது ஓர் சகஜமான தன்மையாகும். அது போல பாரதி தன்னையே மறந்தாள். கண்ணீர் பெருக்கியவாறு கண் மூடி, சமாதியிலிருப்பது போலாகிவிட்டாள். விசனமே அறியாத பல சிறுமிகள் தம் தம் போக்காக விளையாடிக்கொண்டு கொம்மாளமடித்துப் பின்னர் ஆசிரமத்திற்குள்!சென்றார்கள். மற்ற பெண்கள் எல்லோரும் போய்விட்டார்கள்.

ஆசிரமத்தின் தலைவி எல்லாப் பெண்களும் வந்துவிட்டார்களா வென்று ஒரு சுற்று பார்க்கும் வழக்கப்படிக்குப் பார்த்துக் கொண்டே வருகையில் பாரதி தன்னிலை யழிந்து கண்ணீர் பெருகப் படுத்திருப்பதைக் கண்டு சிறிது தூரத்திலிருந்தே பிரமித்தாள். பிறகு மெல்ல அருகில் சென்று கவனித்தாள்.

பத்திரிகை யொன்று கிடப்பதையும் அதில் வெகு கம்பீரமான அழகிய வாலிபனின் சித்திரப்படம் இருப்பதையும் அந்த பாகத்தை பாரதி தன் முகத்தில் வைத்துக்கொண்டு படுத்திருப்பதையும் கண்டு விஷய மறியாமல் திகைத்தாள். பாரதியின் கையிலிருந்து அந்த பத்திரிகையை மெல்ல எடுத்து அந்த படத்தையும்

விஷயத்தையும் கவனித்தாள். உடனே அதை மடித்து மடியில் வைத்துக்கொண்டு ஒரு புறமாக நின்றாள்.

பாரதி திடுக்கிட்டு எழுந்து தனக்குள் "ஐயோ! நேரமாகி விட்டதோ! தூங்கி விட்டோமா? பிரார்த்தனை முடிந்து விட்டதோ! ......பத்திரிகை எங்கே!...என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். அதைக் காணவில்லை. அதே சமயம் பிரார்த்தனை ஆரம்ப மணி யடித்தது கேட்டு அலறியவாறு தலையைச் சரிப்படுத்திக்கொண்டு ஓட்டமாக ஓடி கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு பூஜா மண்டபத்திற்குச் சென்று கடவுளை வணங்கி விட்டு ஒரு புறமாக உட்கார்ந்து தானும் பிரார்த்தனையில் கலந்து கொண்டாள்.

" உடல் குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பி யூற்ற
ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண்ணடுக் குறப்
பாடியாடிக் குதித்துப்
பனி மதிமுகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி யார்த்தார்த் தெழுந்து
மடலவிழ மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானேய வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடுழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடன் மடைதிறந்தனைய வன்பரன்புக் கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தன மிடு
கருணாகரக் கடவுளே. !'

—தாயுமான சுவாமிகள்

182927

என் காதலனின் ஆபத்து நீங்கி அவருக்குப் பூர்ண குணமடையும்படி அருள் பாலிக்கவேண்டும். எப்படியாவது அவர் சுகப்பட்டு விட்டார் என்பதை நான் காதால் கேட்டால் போதும்" என்று

கடவுளை வேண்டிக்கொண்டாள். பிரார்த்தனையும் முடிவு பெற்றது. எல்லோரும் எழுந்து சென்றார்கள்.

பாரதியும் எழுந்து தன்னறைக்குச் சென்றாள். அவளுக்கு அன்று போஜனமே கொள்ளவில்லை. தனக்குப் பசி இல்லை என்பதை வெளியிட்டால் காரணம் என்னவென்று யாரேனும் கேட்க நேரிடும்; அதற்குப் பதில் கூறமுடியாது தியங்கவேண்டும். ஆதலால் தன் வித்யாசங்களை—மாறுதல்களை—வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் சகஜமாகவே நடக்க வெண்ணி எல்லோருடனும் உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வந்து படுத்துக்கொண்டாள்.

தன் காதலனின் புகைப் படம் அகஸ்மாத்தாக அகப்பட்டதைத் தான் கத்தரித்து வைத்துக் கொள்ளவேண்டு மென்று எண்ணியதற்கு மாறாக அது எப்படியோ போய்விட்டதே என்கிற விசனமே பாதித்தது. இதுவும் தன் கால விதியின் கொடுமைதான் என்று சகல துயரத்தையும் அடக்கிக்கொண்டு வயிற்றில் போட்டு மூடிவிட்டாள். இரவு முற்றும் தூக்கமே பிடிக்கவில்லை. அதே நினைவாகப் புரண்டுகொண்டும் ஏங்கிக்கொண்டு மிருந்தாள்.

இப்படியே சில தினங்கள் கழிந்துவிட்டன. பிரதி தினமும் பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டே இருப்பாள். ஏதேனும் விகற்பமாக நடந்துவிட்டால் உடனே அச் செய்தியை பத்திரிகைகளில் வெளியிட்டிருப்பார்கள். அது இல்லாமையினால் க்ஷேமம் என்று எண்ணிக்கொள்வது. வேறு என்ன செய்ய முடியும்?'' என்று தன் விதி எவ்விதமிருக்கிறதோ! அவ்விதம் தான் யாவும் நடக்கும் என்று ஒருவிதமான வைராக்கியத்துடன் மனந் துணிந்து விட்டாள்.

சந்தோஷத்தை மக்கள் அடக்கி வெளிக்குக் காட்டாமலிருப்பினும் அது தானாகவே முகத்தில் ஒருவித தெம்பான களையும் தேகத்தில் பூரிப்பும் பருமனும் ஏற்படுத்திவிடும். துக்கத்தை அப்படி அடக்கி மூடினால் தேகம் மெலிந்து முகத்தில் பொலி குன்றி கன்னம் குழிந்து சரீரம் வெளுத்து ஒருவிதமான

பெருமூச்சும் ஆயாசமும் தானுக ஏற்பட்டுவிடும். இவ்விரண்டும் சகஜம். அதே போல பாரதி சாமர்த்தியமாக எத்தனை மறைக்க முயன்றாலும் அது தன் சக்தியைக் காட்டி விட்டது.

அவளுடைய தேகம் இளைத்து மெலிந்து நாளுக்கு நாள் துரும்பு போலாகிக் கொண்டே வந்தது. இக்காரணத்தை யாரும் அறியவில்லை எனினும் அவள் தேகம் மெலிந்து போவதையும் அன்னத்தை வெறுப்பதையும் தலைவி வெகு ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டே வந்தாள். இதை எவ்விதம் கேட்பது என்ற அச்சத்தினுல் இதைப்பற்றி ஏதும் கேட்காமல் சில தினங்கள் வரையில் மவுனமே சாதித்தாள்.

பாரதிக்கோ தன் காதலனைப் பற்றிய விவரம் ஒன்றுமே தெரியவில்லையாதலால் மன வருத்தம் அதிகரித்தது. எந்த விதமாக விசாரித்து ராஜசேகரனின் தேக நிலைமையைத் தெரிந்து கொள்ளலாம் என்று பலவிதமாக யோசனை செய்து பார்த்தும் ஒன்றும் தோன்றுமல் வாடி வதங்கி விட்டாள். கடைசியில் ஒரு வழி தோன்றியது. அதாவது 'அவன் படுத்திருக்கும் ஆஸ்பத்திரிக்கே கடித மொன்று எழுதி விசாரித்தால் விவரமறியக் கூடும். இதுதான் வழி வேறு மார்க்கம் கிடையாது.' என்ற முடிவுக்கு வந்தாள். எனினும் ஒரு கடிதம் எழுதுவதற்குக் கார்டோ, கவரோ அவளிடம் ஏது? பேதைப் பெண்ணின் மனம் அலைந்துருகுகின்றதேயன்றி அதை யடக்கும் உபாயம் செய்ய தனம் ஏது!

காலணு கையில் கிடையாது. தலை யொட்டாத கடிதம் போட்டால் அது பலனில்லை; ஒருகால் தனக்கே திரும்புமாயின் தன் திருட்டு வெளியாகிவிடும். எப்போது நாம் பரிசுத்தமான ஆசிரம வாழ்க்கையை அனுஷ்டிக்க வந்தோமோ அதன்படி சிறிதும் பிசகாமல் நடக்க வேண்டியது கடமை. அதற்கு முறண்பட்டுத் தான் வித்யாசமாக நடப்பது எத்தனை நம்பிக்கை த்ரோகமாகும். எத்தனை பாபமாகும். என்னுள்ளத்தில் பொங்கும் காதல் வெள்ளத்தை நானும் என்னைப் படைத்த ஈசனும் இக் காதல் தெய்வமாகிய என் ராஜசேகரனும் அறியக் கூடுமேயன்றி பிறர் எங்ஙனம் அறியக்

கூடும்? அறிந்தால் தான் அதில் அவர்களுக்கு ச்ரத்தை எப்படி உண்டாகும்.........உம்.........விதி......விதி.'' என்று தனக்குள் ஒரு வகையிலும் தீர்மானிக்கமாட்டாது தவித்துருகினள்.

கடைசியில் நன்மையோ, தீமையோ இரண்டும் தன்னை தாய் போன்று பாவிக்கும் தலைவி யினிடத்தில் கூறி விடுவதே நல்லது. அவர்கள் எவ்விதம் புத்தி புகட்டுகின்றார்களோ அவ்விதம் நடப்பது என்று தீர்மானித்தாள். ஆனால் லஜ்ஜை இடங் கொடுக்கவில்லை. மனத்தை உடைத்துக் கூற வெட்கமும் தன் நிலைமையை எண்ணி துக்கமும் பாதித்ததால் அவளால் எதுவும் சொல்ல மாட்டாது போய்விட்டது.

அங்குள்ள ஆசிரமத்து மாணவிகள் இவள் ஏன் மெலிந்து போகிறாள் என்பதைக் கேட்டதற்கு ஏதோ சாக்குக் கூறிவிட்டாள். நாளைக்கு நாள் இவளுடைய மனவேதனையினால் மாறுதல்கள் அதிகரித்து விட்டதால் தேக ஆரோக்யமும் குன்றி ஜுரம் காண வாரம்பித்தது. அவ்வாறு ஏற்பட்ட பிறகு பாரதியின் திகில் அதிகரித்து விட்டது. இந்த ஜுரம் அதிகரித்துவிடுமோ என்னவோ? அப்படி அதிகரித்த நிலைமையில் நம்மையறியாது ஏதாவது பிதற்றிவிட்டால் பிறகு வெட்கக்கேடாயும் ஆபத்தாயும் முடியும் என்று தோன்றி விட்டது. ஆகையினால் அவள் தலைவியிடம் தெரிவிப்பதற்கே முற்றிலும் துணிந்துவிட்டாள்.

இவ்விஷயத்தை நேரில் கூறக் கூச்சமடைந்து ஒரு கடிதமெழுதி அதைத் தலைவியின் மேஜையின்மீது வைத்துவிட்டு தலைவி என்ன கூறுவாளோ என்று எதிர்பார்த்துப் பயந்து கொண்டே இருந்தாள்.

தலைவி நமது பாரதியின் சகல விஷயங்களையும் அறிந்தும் அறியாதுபோல ஆதிமுதல் கவனித்து வருவதால் இந்த கடிதமெழுதிய ரகஸியத்தையும் ஒரு நொடியில் ஊகித்தறிந்துக் கொண்டு கடிதத்தை எடுத்து ஆவலோடு படிக்கத் தொடங்கினள். அது பின் வருமாறு:—

"எனது அன்னையினும் பெரியதோர் அன்னை போன்று

ஆதரிக்கும் அன்புடைய அருமைத் தலைவியின் சரணாரவிந்தங்களில் பேதை பாரதி அநந்தங்கோடி வந்தனங்கள் செய்து எழுதும் விண்ணப்பம்.

தலைவியே! நான் இக்கடிதத்தைத் தமக்கு எழுதுவது பெரிய அதிகப்பிரஸங்கித்தனமும் மரியாதைக் குறைவும் ஆகும் என்றதை நானறியாமலில்லை. எனினும் எந்த விஷயமும் மனத்திற்குள் உதிக்காதிருப்பது உசிதம். அங்ஙனமின்றி உதித்த பிறகு அதை ஒளிக்காமல் தலைவியிடம் கூறி விடுவது உத்தமம் என்று என் மனச் சாட்சி கூறுவதால் இதைத் துணிந்து எழுதுகிறேன். மன்னிக்கவும்.

என்னருமைத் தாயே! என்னுடைய விஷயங்களைத் தாங்கள் நேரில் தெரிந்துகொள்ளவில்லை எனினும் என் மனத்தில் ஏதோ ஒரு ரகஸியமான கவலை புகுந்து பாதிக்கின்றது என்பதை மட்டும் நீங்களறிந்திருப்பதாகவே நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். (தனது பூர்வ சரிதையை தன் காதல்சம்பந்தப்பட்ட சகலத்தையும் எழுதிப் பின்) தாயே! இத்தகைய என்னருமைக் காதலருக்குப் பேராபத்து நேர்ந்துவிட்டதாக நான் அன்று பத்திரிகையில் படித்ததுமுதல் என் மனம் நிலை கொள்ளவில்லை. கட்டுமீறிப் பதைக்கின்றது. என்னைச் சித்திரவதை செய்கிறது. இதே காரணத்தினால் என்னிலைமையே மாறுதலடைந்துவிட்டது.

தாயே! இந்த மன வேதனையை எப்படியேனும் சகித்துக் கொள்ளவே நான் முயற்சித்தேன். என் ராஜசேகரனின் உயிர் இருக்கிறதோ இல்லையோ என்கிற இப் பெருங் கவலையால் என் மன மடங்கமுடியவில்லை. அது கடல் போலப் பொங்கிக் கொந்தளித்து வதைப்பதால் இதை எழுதத் துணிந்தேன். இது குற்றமாயினும் சரி, எப்படியாயினும் சரி. இவ் விஷயத்தில் தாங்கள் எனக்குத் தகவலை மட்டும் விசாரித்து அறிவித்தால் போதும்.

அம்மணி! தாங்கள் எப்படி உபதேசிக்கின்றீர்களோ, அப்படி நான் நடக்கத் தயாராகவிருக்கிறேன். எனினும் எனக்கு அவருடைய க்ஷேமம் எப்படி என்பது மட்டுமாவது தெரிந்தால் போதும். இதை நான் பன்முறை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இதிலுள்ள சகல குற்றங்களையும் க்ஷமித்து என்னைக் காப்பாற்றவேணும்.

இங்ஙனம் தங்கள் அடிமையான
பாரதி."

அதைப் படித்ததும் சில விநாடி நேரம் தலைவி பதுமைபோல விருந்தாள். அவளுடைய மனத்தில் ஏதேதோ தோன்றி குழம்பியது. பலமான யோசனைகள் உண்டாயின. சிறிது நேரம் கழித்து ஏதோ தன் வேலையைக் கவனிக்கப் போய்விட்டாள்.

பாரதிக்கோ தான் செய்த வேலைக்குத் தலைவி கோபித்துக் கொண்டுவிட்டாளோ என்கிற பயமும் அபாரமான திகிலும் ஏற்பட்டுவிட்டன. "ஐயோ! நாம் அவசரப்பட்டு ஏன் இக் காரியத்தைச் செய்துவிட்டோம். இதனால் நமக்கென்ன தீங்கு நேருமோ தெரியவில்லையே!" என்று நடுநடுங்கிப்போய் தலைவியினிடமிருந்து என்ன பதில் வருமோவென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தினந்தோறும் தலைவி பாரதியை விசாரித்துச் செல்வது வழக்கம். சோதனைபோல அன்று வராமையினால் பாரதியின் பயமும் திகிலும் அதிகமாகிவிட்டன. இதைப்பற்றி யாரைக் கேட்பது, என்ன செய்வது என்று தெரியாது திகைத்துப்போய்விட்டாள். தனக்கு ஏதோ அனர்த்தம் விளைவித்துக்கொள்ளத்தான் இம்மாதிரியான காரியம் செய்துவிட்டதாக அவள் மனத்தில் பலமான வேதனையும் உண்டாகிவிட்டது.

அன்றும் மறுதினமும் சென்றுவிட்டன. தலைவி பாரதியின் பக்கமே வரவில்லை என்றால் பாரதியின் நிலைமையை விவரிக்கவேண்டுமா! தலைவியை நேரில் காணவும் கூச்சமும் பயமும் பாதித்தன. இதுகாறும் இருந்த வேதனையைவிட பதின்மடங்கு அதிகரித்த

வேதனையுடன் இரண்டு நாளைக் கடத்தினுள். மூன்ருவது தினம் பிற்பகல் தலைவியின் பணிப் பெண் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து பாரதியின் கையில் கொடுத்துச் சென்ருள்.

இதைக் கண்டதும் பாரதியின் நடுக்கம் இன்னும் பதின் மடங்கு அதிகரித்தது. 'இக் கடிதத்தில் என்ன விஷயம் வந்திருக்கிறதோ?' என்று பயந்து நடுங்கியவாறு அதைப் பிரித்தாள். அதில் இரண்டு கடித மடிப்புகளிருந்தன. அதில் ஒன்றை ஆவலுடன் படிக்கத் தொடங்கினுள்.

"அறிவில் சிறந்த ஆற்றல் மிகுந்த அம்மையே! தலைவியே! அனேக வந்தனங்கள். தங்களுடைய கடிதங் கண்டேன். சகல விஷயமும் அறிந்தேன், தாங்கள் எழுதி இருப்பது போலவே இன்னும் பன் மடங்கு அதிகரித்த நம்பிக்கையும் மதிப்பும் பாரதியினிடத்தில் நான் கொண்டிருக்கிறேன். கடவுளால் அளிக்கப்பட்ட தெய்வீகம் பொருந்திய காதல் வலையில் இரு பக்ஷிகளைப்போல நாங்கள் பிணைக்கப்பட்டிருக்கிருேமேயன்றி வெறும் பகட்டும் மயக்கமும் மோகமும் ஆழமற்ற காமமும் கொண்டு நாங்கள் நேசிக்கவில்லை. தாங்கள் உண்மையைக் கேட்டதால் நான் உண்மையை உரைக்கின்றேன்.

தாயே! தற்சமயம் நான் ஆஸ்பத்திரியில் இன்னும் சிகிச்சையிலேயே இருப்பதால் என்னல் அதிகம் எழுத முடியவில்லை. என் மனம் தத்தளித்துத் தவிப்பதே பாரதியின் நிலைமையை அறிய சான்ருகும். சூரியன் எங்கும் ஒரே வெப்பமாகத்தானிருப்பான். அது போன்று இக் காதலின் வேதனையும் பிரிவாற்ருத் துயரமும் இருவருக்கும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும் என்பதை நான் மறக்கவில்லை.

அம்மணி! உங்களுடைய ஆசிரமத்தின் விதிப்படிக்குக் கடிதத்தைத் தமக்கே எழுதுகிறேன். என் கண்மணி பாரதி மகா புனிதவதியான தங்களுடைய ஆதரவிலிருப்பதைக் கேட்க நான் என்னை மீறிச் சந்தோஷமடைகிறேன். என்னுடைய

எரியும் மனத்திற்கு இப்போதுதான் குளிர்ந்த சாந்தியான அவுடதம் கொடுத்தது போலாயிற்று. என்னுடைய நன்றி யறிதலை நான் எவ்விதம் தெரிவிப்பதென்று தெரியவில்லை. தங்களுடைய இப்பேருதவிக்கு எனது மனமார்ந்த வந்தனங்களைப் பல முறையும் செலுத்துகின்றேன்.

தலைவியே! என்னுருயிர் கண்மணிக்கு—என் இன்ப நிலையத்திற்கு—தாங்கள் தேறுதல் கூறித் தேற்றுங்கள். அவள் எந்த நிலைமையிலிருக்கின்ருளோ அதே நிலைமையில் நானிருப்பதாகத் தெரிவியுங்கள். நான் இனி என்னருமை பாரதியைக் காண்பேனு என்று ஏங்கும் சமயம் தங்கள் கடிதம் சமய சஞ்சீவியாகக்கிடைத்து எனக்கு அமிருதங் கொடுத்தது போலாயிற்று. வைத்தியர்கள் இன்னும் சில தினங்களில் குணமாகுமென்று சொல்லுகிருர்கள். நான் குணமடைந்த உடனே அங்கு வந்து பார்க்கிறேன் என்று பாரதியிடம் சொல்லவும். அவளை கவலைப்பட வேண்டாமென்று நான் சொல்லியதாகக் கூறுங்கள்.

புனிதவதியே! இதற்குமேல் நான் என்ன எழுதுவேன்? என் பாரதியின் சுக வாழ்வே என்னுடைய வாழ்வாகும். இதை நீங்களறியாததன்று. ஆகையால் இதோடு நிறுத்துகிறேன். இதிலுள்ள குற்றங் குறைகளை மன்னித்து பாரதியைத் தேற்றுங்கள்.

இங்ஙனம்
தங்கள் நன்றியுள்ள
ராஜசேகரன்.''

இதைப் படித்த உடனே பாரதிக்கு எதிர் பாராத சந்தோஷம் கரை புரண்டுவிட்டது. தன்னிடம் தன் தலைவி காட்டிய உத்தம அன்பையும் தன் காதலன் ராஜசேகரனின் கைப்படவே கடிதத்தைத் தனக்குக் காட்டித் தன் மனத்தைத் தேற்ற முன் வந்த பெருந்தன்மையையும் எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு பூரித்தாள்.

இதுகாறும் இருந்த மனப் பிணிக்கு இக் கடிதம் பரம அவுடதத்தைக் கொடுத்தது போன்ற ஆநந்தமும் ஓர் சக்தியும் மனவலிமை

யும உண்டாக்கியது. இச் செய்கை எல்லாம் கடவுளின் கருணை வெள்ளந்தான் என்று எண்ணி சிறிது நேரம் கடவுளைத் தியானித்தாள். பிறகு மற்றொரு கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

"அன்புள்ள பாரதிக்கு அனேக ஆசீர்வாதம்.

உன் கடிதங் கண்டு கண்ணீர் வடித்தேன். விஷயங்களை யனைத்து மறிந்தேன். இதற்கு நேரில் பதில் கூற பல முறை யோசித்தும் எனது மனம் இடங் கொடுக்கவில்லை. உன் செய்கையை நான் கண்டித்து உன்னை வெறுப்பதாக நீ நினைத்து விட்டதையும் நான் அறிந்தேன். அப்படி நீ எதுவும் நினைக்க வேண்டாம். நீ ஆசிரமத்தில் வந்து சேர்ந்த பிறகு இம்மாதிரி ஏதேனும் செய்திருந்தால் அது சிறிது கண்டிக்கத் தகுந்ததே யாகும். இங்கு வரும் முன்பு உன் தாயார், உன் உடன் பிறந்தோர் அறிய நீ காதலித்த விஷயத்திற்கு இனி குறை கூற சிறிதும் இடமில்லை.

பாரதீ! உன் தாயாரும் உன் சகோதரனும் நல்ல நிலைமையி லிருந்திருந்தால் உங்களுடைய விவாகமே இத்தனை நாளைக்கு முடிந்திருக்கலாம். நினைப்பதொன்று; நடப்பதொன்று. இதுவே உலகத்தில் ஈசனுடைய செயலாக விருக்கின்றது. உன்னுடைய உண்மைக் காதலின் தன்மையை நான் எனது மன உணர்ச்சியினால் முற்றிலும் அறிந்தேன்.

பெண்ணே! காதலை நான் அறியாத கட்டையல்ல. என் பிறவி ஆதி முதலே இம்மாதிரி இருப்பதாக நினைக்க வேண்டாம். காதலுக்கு ஓர் உயிரை பலி கொடுத்த பிறகே நான் இக்கதி யடைந்தேன். அது எனது மூடத்தனம் என்பதை இக்கதி யடைந்த பிறகே நான் அறிந்து கண்ணீர் வடிக்கிறேன். இனி அதில் பயனில்லை. எனக்கிருந்த அருமை மக்களில் ஒரு மகளை காதல் தேவதைக்குப் பலி கொடுத்து விட்டு நான் இங்ஙனம் காலத்தைக் கடத்துகிறேன்.

பாரதீ! அக்காலத்தில் பணப் பேய்க்கு நான் அடிமையாகிப் பறந்தேன். உத்தமமான காதலை நான் அறிய மாட்டேன்.

என் செல்வக் கண்மணி ஜேயமணியின் சரிதையை ஓர் அழகிய கதையாக வரைந்து சாருலோசன என்கிற பெயருடன் வெளியிட்டிருக்கிறது. அந்த புத்தகத்தை உனக்கு பிறகு அனுப்புகிறேன். அதைப் படித்தால் விஷயம் தெரியவரும்......உம்.........இனி வீண் வார்த்தைகளைப் பேசிப் பயனுண்டா! நீ கவலைப் படாதே! கூடிய சீக்கிரத்தில் உனது காதலனை நீ சந்திப்பாய் என்று நினைக்கிறேன். இனிமேல் நீ சந்தோஷமாகவும் தைரியமாகவும் இரு.

இங்ஙனம்
உன் தலைவி.''

[குறிப்பு.—சாருலோசன வென்னும் அதி அற்புதமான காதல் ரஸம் நிறைந்த நாவலை நீங்கள் படித்திருக்கின்றீர்களா! பணப் பேராசையினல் பெற்றோர் மக்களுக்குச் சத்ருவாக விருப்பதையும், உண்மைக் காதலின் உயரிய மகத்துவத்தையும், படித்துப் பட்டம் பெற்ற பெண்களின் படாடோப டாம்பீகத் திமிர் பிடித்த வாழ்க்கை நடத்துவதும் அதனல் ஏற்படும் தீமையும் இன்னும் இது போன்று பல அரிய நீதிகளைப் போதிக்கும் சிறந்த நாவல். இரண்டு பாகங்களின் விலை ரூ. 2—8—0. தான். சந்தா நேயர்களுக்கு விலை ரூ. 2—0—0. முன் பணமனுப்புவோருக்குத் தபால் சார்ஜு இனம். ஜகன்மோகினி ஆபீஸில் கிடைக்கும். உடனே ஆர்டர் செய்யுங்கள்.]

மேற்படி கடிதத்தைப் படித்ததும் பாரதியின் சந்தோஷமும் ஆச்சரியமும் பொங்கி எழுந்தன. "ஆகா! சாருலோசன என்ற கதை உண்மையானதா! கதைக்காக உண்மைபோல வரைந்திருப்பதாக எண்ணினேனே! அந்த ஜெயமணியின் தாயாரா இங்கு தலைவியாகவிருப்பவர்கள்?...அடாடா...என்ன ஆச்சரியம்...என்ன அதிசயம். அக் கதையை நான் படிக்கும் காலத்தில் இந்தக் கட்டுக் கதைக்கு ஏன் இத்தனை புலம்ப வேண்டும்? இது வெறும் ஜோடிப்பல்லவா!' என்று எண்ணிப் பல தடவைகளில் என் மனத்தை நானே சமாதானம் செய்து கொண்டேனே! ஆகா!...இது உண்மை என்பதையறிய என்ன ஆச்சரியமாகவிருக்கிறது. அந்தோ! அக் காலை இந்தம்மாளின் மனம் எப்படி துடித்திருக்கும். உம்......விதி......

விதி தான் கூரிய மதியையும் மாற்றி தன்னுடைய காரியமே ஜயிக்கும்படிக்குச் செய்துவிடுகின்றது.'' என்று தனக்குள் பலவிதமான யோசனைகளைச் செய்து கொண்டும், தன் காதலரின் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பல தடவை படித்து இன்ப மடைந்தும், அவன் எப்போது வரக் கூடும் என்று எதிர் பார்த்தும் இருந்தாள்.

தன்னுடைய விஷயத்தில் இத்தனை சிரத்தை எடுத்துக் கொண்டு தனக்காகப் பாடு பட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கடித மெழுதி தலைவிக்கு அனுப்பி விட்டாள். பாரதியின் மனம் சற்று சமாதானம் பெற்றுத் தேற வாரம்பித்தது. பின்னும் சில தினங்கள் சென்றன.

அந்தி வேளை உலகமெங்கும் வெகு ரம்மியமாக விருக்கின்றது. இந்த ஆநந்தகரமான ஆசிரமத்தில் ஜாதி மத வித்யாசமின்றி சகல தேவதைகளின் உருவப்படங்களும் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டு வைத்திருக்கின்றன. எல்லா மாணவிகளும் சந்தோஷமாக அந்த பூஜா மகாலில் வந்து நமஸ்காரம் செய்து விட்டு வழக்கம்போல பிரார்த்தனை கீதங்கள் பாடத் தொடங்கினர்கள்.

சாதி குலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
    தன்மை நாம
மேது மின்றி யெப் பொருட்கு மெவ்விடத்தும்
    பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மரத்தூவெளியை மனதவிழ நிறைவான
    துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே நினைவாகச்
    சிந்தை செய்வாம். —தாயுமான ஸ்வாமிகள்.

கூவிக் கொள்ளாய் வந்தந்தோ என் பொல்லாக் கருமாணிக்கமே
ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்
மேவித் தொழும் பிரமன் சிவனிந்திரனுதிக் கெல்லாம்
நாவிக்கமல முதற் கிழங்கே உம்பரந்ததுவே —நம்மாழ்வார்.

ஏக காலத்தில் நூற்றுக் கணக்கான கோகிலங்கள் ஒன்றுகூடி இசைப் பாடுவது போலப் பாடும் அழகு எல்லோரையும் பரவச

முறச் செய்யும் என்பதில் ஐயமுண்டா! தலைவி அப்படியே த்யானத்தில் ஈடுபட்டிருந்தாள்.

அச்சமயம் வீதியில் ஒரு மோட்டார்கார் வந்து நின்றது. அதிலிருந்து மெலிந்த தேகமும் பலவீனமான நிலைமையுடனும் நமது ராஜசேகரன் இறங்கி ஆவலே வடிவமாக வந்து ஆசிரமத்துப் படி ஏறினன். அப்போது அங்குள்ள அப்பூஜா மண்டபத்தின் அழகும், கடவுளது படங்களின் அருமையும், மாணவிகள் ஒன்ருக உட்கார்ந்து தோத்திரப் பாடல்கள் பாடும் இனிமையும் இத்தனை மாணவிகளுக்கு மத்தியில் இவனுடைய உயிர்க் காதலியான பாரதி மெலிந்த தன்மையில் கடவுள் தியானத்தினல் கண் மூடி உட்கார்ந்திருக்கும் தேஜஸும் தலைவி ஓர் மணி விளக்கு போலப் பிரகாசிக்கும் எழிலும் ஒன்றுகூடி ராஜனின் மனத்தை ஆநந்தப் பரவசமுறச் செய்துவிட்டன.

அவனுக்கு இந்த சமயம் தான் உள்ளே சென்ருல் இந்த அற்புதமான பிரார்த்தனைக் கோஷ்டி கலைந்துவிடும் என்று தோன்றியதால் இந்த ஆநந்தத்தைத் தானும் கண்டு இன்பமடைவதைத் தடுக்கலாகாதென்கிற நோக்கத்துடன் அப்படியே சாளரத்தின் வழியாக அதைக் கண்டு மெய்மறந்தவனுய் நின்றுவிட்டான்.

## 20-வது அதிகாரம்

### செப்பறியாத் துயரம்—துப்பறியும் வீரர்

உலகத்தில் எந்த இடத்தில் நல்லதோ கெட்டதோ எது நடந்தபோதிலும் "கூ" என்று ஒரு குரல் கேட்பதற்குமுன் ஆயிரக்கணக்கான மனிதர்கள், காக்கையின் கூட்டம் போல உதவி புரியும் நோக்கம் இல்லா

விடினும், வேடிக்கை பார்க்கும் நோக்கத்துடன் கூட்டம் கூடிவிடு வார்கள். நூறு குரலோடு நூற்றொன்றும் குரலாகத் தடியோடும் தாம் போடும்‘ உதை குத்து’ என்று திருடன் அல்லது துஷ்ட ஜந்துக்கள் வந்துவிட்ட இடமாயின் கூவுவார்கள். யாரேனும் அடிபட்டு விழுந்து விட்டால் ஆயிரம்பேர் வேடிக்கை பார்ப்பவர்களில் ஐந்து பெயர்கள் உதவி செய்ய முன்னே வருவதும் அபூர்வமாகிவிடும். கலகத்தோடு கலகம் விளைவிப்பதும், கலாட்டாவோடு கலாட்டா செய்வதுமே சில மனிதர்களின் கொள்கையாக இருக்கின்றது.

ஆனல் இப்பொழுது நம்முடைய கோதாவரி அம்மாள் மாட்டு வண்டியுடன் தாறுமாருக இழுத்துத் தள்ளப்பட்டுள்ள சந் தர்ப்பத்தில் வேடிக்கை பார்க்கும் வீண் கூட்டத்திற்கு இடங்கொடுக் காமல் அவ்வீட்டு ஜமீந்தாரும், துப்பறியும் நாயுடுவும் ஓட்டமாக ஓடி மிரண்டுபோய்விட்ட அம் மாட்டின் மூக்காங் கயிறைப் பிடித்து இழுத்து, அதோடு போராடி, மாட்டை ஒரு புறம் நிறுத்தி வைத்து அங்குள்ள இன்னும் சிலர் உதவியால் கவிழ்ந்துவிட்ட வண்டியி லிருந்து விழுந்து அலங்கோலமாகக் கிடக்கும் கோதாவரி அம்மா ளைத் தூக்கிக்கொண்டுபோய்ப் பங்களாவுக்குள்ளே கிடத்தி சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்கள்.

ஏற்கனவே தன் கணவன் விஷயமான கவலையால் மெலிந்து போயிருந்த கோதாவரி அம்மாள், மாடு மிரண்டு விபரீதமாக இழுத் துக்கொண்டு சென்றதைப் பார்த்ததும் அபாரமான பயமும் கிலியும் அடைந்து “டேய்! வீராசாமி! மாட்டைப் பிடி, மாட்டைப் பிடி” என்று சத்தமிட்டவாறு பதைத்தாள். வீராசாமி தன் சின்ன யஜ மானி கூட்டத்திற்குள்ளே சென்றிருப்பதால், அவள் திரும்பி வருவதை எதிர் பார்த்துக்கொண்டு கூட்டத்தின் பின்புறமே நின் றிருந்ததாலும், இக் கூட்டத்திலுள்ள இரைச்சலினலும், அவனுக்கு இம் மோட்டார்கார் வந்த சத்தமோ, தன் யஜமானியம்மாள் கூவிய சத்தமோ ஒன்றும் காதில்விழவில்லை. வண்டி கடகடவென்று முறிந்து விழுந்த சத்தத்தை எல்லோரும் கேட்டு ஓடிய பிறகுதான் வண்டிக் கார வீராசாமியும் ஓடி வந்தான்.

தன் தாயாருக்கு ஏதோ பெருத்த ஆபத்து நேர்ந்துவிட்டதாக எண்ணி கோகிலம் "அம்மா!" அம்மா!' என்று அழ ஆரம்பித்துவிட்டாள். ஜமீந்தார் வீட்டுப் பெண்பிள்ளைகளெல்லோரும் அன்போடு கோதாவரி அம்மாளுக்குச் சிகிச்சை செய்து மூர்ச்சை தெளிய வைத்தார்கள். மூர்ச்சை தெளிந்ததும் கோதாவரி அம்மாள், சரியான ஞாபகத்தை அடைந்தாளேயன்றி, வண்டியிலிருந்து விழுந்த வேகத்தில் நன்ருக அடி பட்டுவிட்டதால் எழுந்திருக்கவோ கைகால்களை அசைக்கவோ சக்தியற்றவளாகிவிட்டாள். புலம்பும் கோகிலத்தை அருகில் உட்கார வைத்துக்கொண்டு சமாதானம்செய்து தேற்றினள்.

அங்குள்ள ஒவ்வொருவரும் கோதாவரி அம்மாளிடம் வந்து 'அம்மா!, அதிகமாக அடிபட்டுவிட்டதா. நிரம்பவும் வலிக்கின்றதா?" என்று வெகு அனுதாபத்துடன் கேட்கின்ருர்கள். தனக்கு முன் பின் அறியாத எல்லோரும் தன்னிடம் இவ்வளவு அனுதாபத்தைக் காட்டி உபசரிப்பதைக் காண கோதாவரி அம்மாளின் உள்ளம் பூரித்தது. இவர்களுடைய அன்பினுல் தனக்கு ஏற்பட்ட வலியும் குறைந்துவிட்டது போலத் தோன்றியது. கேட்பவர்களுக்கெல்லாம் மரியாதையாக "என்னுல் உங்களெல்லோருக்கும் அபாரமான சிரமம் ஏற்பட்டது பற்றி மிகவும் வருத்தப்படுகின்றேன். 'பூசை வேளையில் கரடி புகுந்தது' போல நீங்கள் சந்தோஷமாக வெற்றி விழா கொண்டாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் நான் ஒரு பெரிய சனியனுகத் தோன்றி உங்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன். நீங்கள் எல்லோரும் என்னை மன்னிக்கவேண்டும்.

இம் மண்ணுலகத்தில் யான் இருந்தும் இதுகாறும் இப் பெரியாரின் புகழைத் தெரியாத மூடமாக இருந்தேன். இப்பொழுதே கேள்வியுற்று, என் குடும்பத்திற்கு நேர்ந்துள்ள பேராபத்தை இப் பெரியாரிடம் முறையிட்டு என் கஷ்டமும் நிவர்த்தியாகி ஜயம் பெற வேண்டுமென்று கோருவதற்காக இங்கு வந்தேன். வந்தவிடத்தில் என்னுல் உங்களுக்கும் இவ்வளவு சிரமம் ஏற்பட்டதுடன் என் கதியும் இப்படியாகிவிட்டதே' என்று வருந்திக் கண்ணீர் விடுத்தாள்.

இதைக் கேட்ட அருகில் இருந்த ஜமீந்தாரிணி "அம்மா!

கவலைப்படவேண்டாம். வெயிலில் வெதும்பி, தலைவலியால் தவித்து, பசியால் பதைத்து, வாடி வருந்தியவர்களுக்குத்தான் அந்தந்த கஷ்டத்தின் கொடுமை நன்ருகத் தெரியும். அந்த விஷயத்தில் நான் பட்டு என் தலை மொட்டை பறந்திருப்பதால் உங்களுடைய விஷயம் முற்றும் தெரியாவிடினும் குழந்தை சொல்லிய இரண்டொரு வார்த்தைகளால் உங்களுடைய மனம் இப்பொழுது எப்படி தத்தளிக்கிற தென்பதை நான் யூகித்து அறிந்துகொண்டேன். அம்மா! ஆபத்து என்பது மனிதர்களுக்கல்லாமல், வேறு யாருக்குத்தான் வரும். அதை அனுபவிப்பதற்குத்தான் நாம் எல்லோரும் பிறந்திருக்கிரேம். ஆகையினல் கவலைப்பட்டு உபயோக மென்ன? நம்மால் கூடிய வரையில் அந்த ஆபத்துக்களை நீக்கிக்கொள்ள வழி செய்து கொள்ளவேண்டும். எங்களுக்கு இம்மாதிரி பேராபத்து நேர்ந்திருந்த காலத்தில் நானும் எப்படித் தவித்திருப்பேனே ஈச்வரனுக்குத்தான் தெரியும். இவ்வாபத்திலிருந்து மீளுவதற்கு வழியேயில்லையென்றும் கூண்டோடு கைலாயம் போகவேண்டியதென்றும் தீர்மானித்துவிட்டேன்.

இக் கலியுகத்தில் மக்களின் கவலையைக் களைந்து, புத்துயிர் கொடுக்கக்கூடிய ஓர் புண்ணியவானும் இப் பூலோகத்தில் இருக்கிருர் என்பதை யறிந்து இந்த மஹானுபாவனிடம் முறையிட்டுக் கொண்டோம். இச் சந்தர்ப்பத்தில் இவர் பேசுந் தெய்வமாகவே என் குடும்பத்திற்குத் தோன்றி ஒவ்வொருவருக்கும் உயிர்ப்பிச்சை யளித்தார். இது போன்று எத்தனையோ குடும்பங்களுக்கெல்லாம் உயிர் கொடுத்த மஹானுபாவன் இவர். உங்களுடைய கஷ்டத்தையும் நிவர்த்தி செய்து ஜயத்தைக் கொடுப்பாரென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகையால் நீங்கள் கவலைப்படவேண்டாம். இந்தப் பெரியாரிடம் உங்களுடைய விஷயம் பூராவும் தெரிவித்துவிடுங்கள். கடவுள் இருக்கிருர். ஒரு குறைவும் செய்யமாட்டார்'' என்று வெகு அன்போடு கூறினுள்.

இதற்குள் ஜமீந்தாரின் குடும்ப வைத்தியர் வந்து கோதாவரி அம்மாளுக்கு அடி பட்ட இடங்களுக்கு மருந்துகள் போட்டு சிகிச்சை செய்தார். கோதாவரி அம்மாளும் ஜமீந்தாரினி அம்மா

வின் தேறுதல் மொழிகளைக் கேட்டு மிக்க சந்தோஷம் அடைந்து அந்த அம்மாளுக்குத் தன்னுடைய நன்றியறிதலான வந்தனத்தைச் செலுத்தித் தன்னுடைய கஷ்டங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் அந்த அம்மாளிடம் கூறினாள்.

ஜமீந்தாரும் தன் மனைவியிடம் அந்த அம்மாளை ஒப்புவித்து விட்டு தங்களுடைய கூட்டத்தை நடத்தச் சென்றுவிட்டார். நாயுடுவைப்பற்றிப் புகழ்ந்து பேசியும் அவருக்கு மாலை சன்மானங்கள் அளித்தும் தங்களுடைய நன்றியறிதலையும் வந்தனத்தையும் ஜமீந்தார் செலுத்தினர். நாயுடுகாரு தன்னுடைய பிரதி வந்தனத்தைத் தெரிவித்து தான் ஒரு கடமையாக இவைகளையெல்லாம் செய்ததாயும், எனக்கு இம்மாதிரியான புகழ் வார்த்தையை நீங்கள் உங்களுடைய அன்பினால் சொல்லிவிட்டீர்களே யன்றி அவை எனக்கு ஒவ்வாது'' என்றும் பெருந்தன்மையாகக் கூறித் தன்னுடைய பிரசங்கத்தை முடித்துக்கொண்டார். அதன் பிறகு கூட்டம் கலைபட்டு எல்லோரும் விருந்துண்டு மகிழ்ந்து மதுரமான சங்கீதக் கச்சேரி சிறிது நேரம் கேட்டார்கள்.

கச்சேரி முடிந்தவுடன் நாயுடுகாரு சாவதானமாகக் கோதாவரி அம்மாளருகில் வந்து "அம்மா! உங்களுடைய விஷயங்களை எல்லாம் விளக்கமாகச் சொல்லுங்கள். என்னால் கூடிய வரையில் உண்மையைக் கண்டுபிடிக்க நான் பாடுபடுகிறேன். உங்களுடைய குழந்தையின் முகத்தைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவள் கையிலுள்ள சிறிய சிசுவைப் பார்த்தால் இன்னும் கண்றாவியாக இருக்கின்றது. தைரியமாகச் சொல்லுங்கள்'' என்று மரியாதையாய்க் கேட்டார்.

இதைக் கேட்ட கோதாவரி அம்மாள் தன் வீட்டிற்குக் காமு வந்ததுமுதல் சகல விவரங்களையும் தெரிவித்து "ஐயா, பெரியவரே! எங்களுடைய குடும்பத்தின் விளக்கைத் தயவு செய்து தாங்கள் ஏற்றி வைக்கவேண்டும். தாங்கள்தான் எங்களுக்குக் குலகுரு. இந்த அனாதைக் குழந்தையின் விஷயத்திலும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். 'ஏழைக்கு இரங்குவது ஆழியினும் பெரிதே' என்ற பெரி

யாரின் வாக்குப்படி தாங்கள் இவ் வேழையின்மீது கருணை காட்ட வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

இவ்விஷயத்தைக் கேட்ட நாயுடு ஆச்சரியத்துடன் 'ஓகோ! அந்தப் பெண் விஷயமா? வெகு நாட்களுக்கு முன்பே நான், அப் பெண்ணின் விஷயத்தைப்பத்திரிகையில் படித்தேன். அதற்குப் பிறகு இப்பொழுது சமீபத்தில் அப் பெண்ணை யாரோ ஒருவன் பிடித்துக் கொடுத்து விட்டதாயும், அவனுக்குச் சர்க்காரில் ஆயிரம் ரூபாய் வெகுமானம் கொடுக்கப்போவதாயும் அவ்வழக்கு மேற்கொண்டு இனிமேல் நடக்குமென்றும் பத்திரிகையில் வந்திருந்தது. அதோடு அப் பெண்ணின் குற்றத்தை மறைத்து, அவளை வேண்டுமென்றே வீட்டில் வைத்துக் கொண்டிருந்ததாகவும், அக் குற்றத்திற்காக கோதண்டம் என்ற நிரபராதியையும் கைது செய்து கொண்டு போயி ருப்பதாயும் அவருடைய மனைவியார் அந்த ஏழைப் பெண்ணைக் காப்பாற்றும் பொருட்டு தன்னுடைய பர்த்தாவின்மீது வந்த படாப் பழியையும் ஒப்புக்கொண்டு இவ் வழக்கைப் பலமாக நடத்தப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாயும், அந்த அம்மாளின் குணத தைப்பற்றிப் புகழ்ந்தும் பத்திரிகையில் வரையப் பட்டிருந்தது. இது யாரோ, என்னவோ என்று நினைத்தேன். தாங்கள் வருத்தப்பட வேண்டாம். அம்மா! அந்தக் காமுவின் விஷயம் உங்களுக்குத் தெரிந் திருக்குமாயின், அதையும் சொல்லுங்கள்.'' என்றார். உடனே கோதாவரி அம்மாள் காமு தன்னிடம் தெரிவித்த வரலாறு முற்றும் ஒன்று விடாமல் அப்படியே உரைத்து விட்டாள். இவைகள் எல்லாவற்றையும்மனத்தில்வாங்கிக் கொண்ட நாயுடு 'அம்மா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். என்னால் கூடிய வரையில் இவ் வழக் கில் உழைக்கப் பிரயத்தனப் படுகிறேன். நாளைய தினம் உங்களுக்கு உடம்பு சரியாக இருக்குமாயின் நாம் நேரில் சிறைச்சாலைக்குச் சென்று அந்தப் பெண்ணைப் பார்க்க விரும்புகின்றேன். ஆகையி னால் நாளைய தினம் நான் தங்களை வந்து பார்க்கின்றேன்'' என்று கூறிவிட்டுக் கோகிலத்திற்கும் தேறுதல் மொழிகளைக் கூறி, அவளை யும் தேற்றிவிட்டு உத்திரவு பெற்றுக் கொண்டு சென்றார்.

தனக்கு முன்பின்னறியாத ஓர் அன்னிய மாதாக கோதாவரி இருப்பினும் ஜெமீந்தாரினியம்மாளுக்கு அவளிடத்தில் ஒரு வித

மான பச்சாத்தாபமும் அன்பும் உண்டாகியதற்குக் காரணம், படாப் பழியினால் தான் மிகவும் வருந்தி தாமரையிலைத் தண்ணீர் போல் தத்தளித்துத் தவித்திருப்பதால் அம்மா திரியான நிலைமையிலல்லவோ இந்த அம்மாளும் இருப்பாள் என்ற உணர்ச்சி ஏற்பட்டதே! தன்னை யறியாமல் உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணமும் ஏற்பட்டது. மேலும் கோதாவரியம்மாள் தன்னிடத்தில் சகல விஷயங்களையும் ஒன்று விடாமல் உண்மையை உரைத்தால் அந்த அம்மாளிடத்தில் மதிப்பும் நம்பிக்கையு மேற்பட்டன.

கோதாவரி அம்மாளின் பக்கத்தில் தானேயிருந்து கவனித்துக்கொண்டிருந்ததோடு அந்த அம்மாளுக்கு நாயுடுகாருவின் பெருமையை எடுத்துக் கூறி தைரியப் படுத்தினாள். சிறுமியான கோகிலம் அந்த குழந்தையுடன் தாயினருகிலேயே விளையாடிக் கொண்டிருந்தாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு கோதாவரியம்மாளின் உடம்பு சற்று குணப்பட வாரம்பித்தது கண்டு ஜமீந்தாரினியம்மாள் மிகுந்த சந்தோஷமடைந்தாள். நாயுடுகாரு ப்ரத்யேகமான உத்திரவு அதிகாரிகளிடம் பெற்றுக் கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று காமுவைக் கண்டு அவருக்கு வேண்டிய சகலமான விஷயங்களையும் கேட்டறிந்து கொண்டார். "அம்மா! நீ கவலைப்படாமலிரு. அந்த பொன்னுசாமி என்கிற மனிதனின் புகைப்படம் எங்கேனும் கிடைக்குமா! அவனை நேரில் திடீரென்று தெரிந்து கொள்வதைவிட படத்தில் பார்த்த பிறகு அறிவது நலம் என்று தோன்றுகின்றது. முதல் மூல காரண கர்த்தா அவனாகையினால் அவனைப் பார்க்க என் மனம் விரும்புகின்றது.'' என்றார்.

இதைக் கேட்ட காமு மிக்க விசனமும் அவமானமும் அடைந்தபடியே "அறிவில் சிறந்த பெரியீர்! என்னுடைய இந்த வெட்கக் கேடான பிழைப்பிற்கு முதல் கர்த்தாவாகிய அந்த படு பாவியை நான் முதலில் என் மனக் கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமென நினைத்தேன். அக் காலையில் அவன் பாத சேவையே எனது சொர்க்க வழி என்று நம்பினேன். அத்தகைய மதிப்பு வைத்ததால்

அப்பாவியுடன் நானும் அமர்ந்து இஷ்டம் போல ஒரு புகைப்படம் எடுத்தோம். அப் படத்தை என் வீட்டில் தான் வைத்திருந்தேன். எங்கள் விதி இம்மா திரியாவதற்கு நாங்கள் வீட்டை விட்டுப் புறப் படுகையில் ஒரு வண்டியில் சாமான்களை ஏற்றிக் கொண்டு சென் ரோம். வண்டி என்ன கதியாயிற்ரோ! சாமான்கள் எப்படி போயிற் ரோ! என் தாயார் எக்கதி யடைந்தாளோ! ஒன்றும் இப்பாவிக்குத் தெரியாது. இங்கு போலீஸார் கூறுவதிலிருந்து என் தாயாரையும் கைது செய்திருப்பதாக அறிந்து தவிக்கின்றேன்.

ப்ரபோ! இக்கலியுகத்தில் தாங்கள் எத்தனையோ உயிர்களுக்குப் பேராதரவளித்துக் காப்பாற்றிய அரிய பெரிய விஷயங்களை ஏற்கெ னவே பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். ஏழைக்கிரங்குதல் ஆழி யினும் பெரிது என்பது போல இந்தப் பாவியின் மீதும் என் குழந் தையின் மீதும் அளப்பரிய அன்பு கொண்ட கோதாவரியம்மாளின் முயற்சியினல் உங்களை எனக்குக் கடவுள் காட்டினர் என்று திட்டமாய்க் கூறுவேன். இச்சமயம் கருணை கூர்ந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும். உண்மையில் நாங்கள் இந்த அவமானந் தாங் காமல் இப்படி வெளியேறினேமேயல்லாது சத்தியமாகக் கொலை செய்யவில்லை.'' என்று கண்ணீர் பெருகக் கூறினள்.

இதைக் கேட்ட நாயுடுகாரு "அம்மணீ! இந்த சிறைச்சாலையில் உன்னை அதிக நாள் வைக்கமாட்டார்கள். உன் தாயார் இருக்கும் பெரிய சிறைச்சாலைக்குத்தான் உன்னையும் கொண்டு போவார்கள். அங்கு சென்றாலும் நீ உன் தாயாருடன் சுயேச்சையாக இருக்க முடியாது. தனி விடுதியில் தான் இருக்கச் செய்வார்கள். நான் என்னல் கூடிய வரையில் உங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முயற்சிக்கிறேன். நீ தைரியமாயிரு. கவலைப்படாதே. அம்மா! ஒரு விஷயம். அந்த மனிதன் உன்னையே மீண்டும் விவாகம் செய்து கொண்டு வைத்துக் கொள்வதாகக் கூறினல் நீ அதற்கு இசைவாயா! உன் சம்மதத்தைத் தெரிவி.'' என்ருர்.

காமு—(ஆவேசங் கொண்டவளைப்போல ஆத்திரமடைந்து) ஆகா! அந்த நம்பிக்கைத் துரோகியையா! அப்பாதகனையா! ஐயோ!

அவனுடைய கபடமறியாது தானே என்னுயிரையே அவனுக்கு அர்ப்பணம் செய்திருந்தேன். நான்; எத்தனை உயர்வான ப்ரேமை யுடன் அவனை நேசித்தேன் என்பதை 'அக் கடவுள் ஒருவர்தானறி வார். அத்தகைய என்னை வஞ்சனை செய்து மோசம் செய்து நடுச் சந்தியில் விட்ட பிறகு அச் சண்டாளனை இனி நான் நினைப்பதா!

அந்தோ! என் மனம் முறிந்து விட்டது. என் தேகமோ வெடித்து எரிந்துவிட்டது போலாகிவிட்டது. மகா பாப ஜந்துவை நான் தீண்டி என் பிறவியையே பாழ் படுத்திக் கொண்ட வதை என்னை சும்மா விடாது. என் மனம் அருவருத்து அவனைக் காரி யுமிழ்கின்றது. நாயுடுகாரு! என் பிறவி இதோடு பாழாகி குப்பை யிலும் கடையதாகி விட்டது. என்றாலும் அக் குப்பையில் முளைத்த தாயினும் தாமரையைப் பழிப்பதுண்டா! அதுபோல என் மங்களத் தின் ஒரு உயிரின் பொருட்டு நான் இத்தனை கஷ்டங்களை யனுப வித்தும் உயிர் வாழவே பிரியப்படுகிறேன். அந்த சிசுவினால் தான் என் கதி......என் குடும்பத்திற்கே......இத்தகைய இழுக்கும் அழுக்கும், அவமானமும் உண்டாயின. அந்தக் குழந்தையினா லேயே பின்னொரு காலத்தில் நான் சிறிது பதப்பட வேண்டும். இச் சிறுமை நீங்கிப் பெருமையாகச் சாக வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் ஊசலாடுகின்றது. ஆதலால் நான் தற் கொலைக்கோ, தூக்கு தண்டனைக்கோ விரும்பவில்லை. என்னிஷ்டம் இதுதான்.'' என்று கூறினாள்.

நாயுடு.—அம்மா! நீ கூறுமலேயே உன் மன உறுதியை நான் தெரிந்து கொண்டேன். இருப்பினும் என்னுடைய காரியங்கள் மேலே நடப்பதற்குச் சில விஷயங்கள் தெரிய வேண்டும்; ஆதலால் கேட்டேன். நான் அந்த சாமான் வண்டியையும் கண்டு பிடிக்க முயற்சிக்கின்றேன். நீ கவலைப்படாதே—என்று தேறுதல் கூறிவிட்டு கோதண்டத்தினிடம் சென்று அவருக்கும் தேறுதல் கூறிப் பின்பு விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

பின்னும் சில தினங்கள் சென்றன. நாம் முன்பொரு அதி காரத்தில் தெரிவித்தபடிக்கு காமுவை இந்த சிறைச்சாலையை விட்டு

வேறு சிறைச்சாலைக்கு மாற்றிவிட்டார்கள். அந்த இடத்திற்கு இவள் சென்றதைப் பார்த்த உடனே விசாலம் கதறியழுத குரல் கேட்டுக் காமுவும் துவண்டு போய் விழுந்து விட்டாள்.

விசாலத்தையோ ஒரு அறையில் அடைத்திருக்கிறது. காமுவையோ இரு வார்டர்கள் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் அவர்கள் ஒருவருக் கொருவர் நேராக எங்ஙனம் சந்திக்கக்கூடும்? இருவருடைய மனமோ தாமரை இலைத் தண்ணீர் போல தத்தளிக்கின்றது. விசாலம் தன்னுடைய அபாரமான துக்கத்தினால் உந்தப் பட்டுக் கீழே விழுந்தவள் மீண்டும் எழுந்து நின்று வார்டர்களை நோக்கி,

"அம்மா! வார்டரம்மா! சற்று தயவு செய்யுங்கள். இப்பாவிக்கு சற்று இரக்கங் காட்டுங்கள். என் மகளை என் கண்ணில் காட்ட மாட்டீர்களா! என் வயிறு எரிகிறதே! என் மகளை நான் ஒரு தரம் பார்த்து விட்ட பிறகு வேறு இடத்தில் அடைத்து விடுங்கள். இது உங்கள் விதிக்கு விலக்காக இருப்பினும் என் பொருட்டு மனமிரங்கலாகாதா! காமூ! காமூ! என் செல்வியே! உன்னால் நான் பிற்காலத்திலாவது எத்தனையோ மேன்மையாக வாழலாமென்று எண்ணி படாத பாடு பட்டு உன்னை வளர்த்தேனே! மல ஜலம் முதல் ஏந்திக் கொட்டி தோட்டி வேலை செய்து உன்னைக் காப்பாற்றினேனே! அத்தகைய உன்னையும் என்னையும் கடவுள் இந்த கதிக்கு ஆளாக்கி விட்டாரே! அம்மா! குழந்தை இறந்து விட்டதா!...... ஐயோ!......என்று கதறினாள்.

இதைக் கேட்ட காமுவுக்கு தாங்கக்கூடாத விசனம் தள்ளியடிக்கின்றதென்றாலும் அவளுக்குள்ள சிறிது விவேகமும் கூடவே வேலை செய்தது. நாயுடு ஏற்கெனவே தெரிவித்திருப்பதால் தன்னை தாயாருடன் கூடவிருக்க உத்திரவு கொடுக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்துகொண்டாள். அவள் விசனத்தோடு கதறியவாறு "அம்மா! என் தாயே! கதறாதே! புலம்பாதே! நாம் செய்த பாவம். பூர்வத்தில் அளவற்ற கர்மாவைச் செய்துவிட்டு இப்படித் தவிக்கின்றோம். குழந்தை சாகவில்லை. சவுக்கியமாகவிருக்கிறது. நீ கவலைப்

படாதே! நாம் நிரபராதிகள் என்பதைக் கடவுள் அறிந்து காப்பாற்று வார். தைரியமாகவிரு. இனி புலம்பிப் பிரயோஜனமில்லை'' என்று மனந்துணிந்து, தைரியமாகக் கூறினள்.

இதைக் கேட்ட வார்டர்களுக்கே மனங் கலங்கி சிறிது இளகி விட்டது. நமது காமுவின் இளமைப் பருவத்தையும் அவளுடைய பால் வடியும் பளிங்கு போன்ற துல்லியமான—கபடமற்ற—களங்க மற்ற—முகத்தையும்—பார்த்து இத்தகைய பெண்மணிக்கு இம்மா திரியான துயரமும் வருமா! என்று விசனித்தார்கள்.

காமு கூறியதைக் கேட்டதும் விசாலத்தின் மனத்தில் ஒரு புறம் அபாரமான சந்தோஷமும் மற்றொரு புறம் துயரமும் உண் டாகி இரண்டும் ஏக காலத்தில் வதைக்க வாரம்பித்தன. "காமூ! காமூ! குழந்தை உயிருடனிருக்கிறதா! ஐயோ! நான் மகா பாவி என் பாவிக் கண்ணுல் நான் பாராது போய்விட்டேன். குழந்தை எங்கிருக்கின்றது? யாரிடம் விட்டு வந்தாய். நீ இதுபரியந்தம் எங் கிருந்தாய். குழந்தையை என் கண்ணில் காட்ட முடியுமா? பார்க்க வேண்டி என் மனம் பதைக்கின்றதே!'' என்று கதறினள்.

இதைக் கேட்ட காமுவின் மனம் மிகவும் உருகிவிட்டது. வார்டர்களை நோக்கி "அம்மா! உங்களுடைய அனுமதி கிடைக்கு மாயின் மனம் மெலிந்து தவிக்கும் என் தாயாரின் ஆவலைச் சிறிது பூர்த்தி செய்கிறேன். நீங்கள் தயை காட்டவேண்டும்.'' என்று வேண்டிக்கொண்டாள். வார்டர்கள் இக் காரியம் தங்கள் திட்டத் திற்கு விரோதமாகவிருப்பினும் பரிதாபத்தினுல் மனமிளகிப்போய் அக் காரியத்திற்கு இசைந்தார்கள். உடனே காமுவை விசாலம் இருக்கும் அறைப்பக்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

காமுவும் சகலமான விஷயங்களையும் தாயாருக்கு எடுத்துக் கூறினள். தைரியமாக விருக்கும்படிக்குச் சொல்லிவிட்டு உடனே கிளம்பிவிட்டாள். இத்தனை மரியாதையாக காமு நடந்துகொண்ட தற்கு வார்டர்கள் சந்தோஷப்பட்டுக் காமுவை மற்றொரு தனிக்

கொட்டடியில் அடைத்தார்கள். விதியை எண்ணிக் கண்ணீர் பெருகியவாறு அவள் படுத்திருந்தாள்.

* * * *

காமுவைக் காட்டிக் கொடுத்துவிட்டு ஆயிரம் ரூபாய் பரிசு வாங்கிக்கொள்ளத் தயாராகவிருந்த பொன்னுசாமியின் திமிருக்கும் அகம்பாவ சந்தோஷத்திற்கும் எல்லையே இல்லை. தான் யாரோ அன்னியனென்றும் தான் பத்திரிகை விளம்பரத்தைக் கண்டு இவளைக் கண்டு பிடிக்க ப்ரயத்தனம் செய்து பிடித்துக் கொடுத்ததாயும் போலீஸாரிடம் கூறிக்கொண்டான்.

போலீஸாரும் இதைப்பற்றி மேலே விசாரிக்கவில்லை. பணத்தைக் கொடுக்கவே சித்தமாகிவிட்டார்கள். நமது துப்பறியும் நாயுடுவுக்கு இவ் விஷயம் ஜெமீந்தார் வீட்டில் தெரிந்துகொண்ட உடன் மறு தினமே காமுவை நேரில் கண்டு தமக்கு வேண்டிய சகல விஷயங்களையும் விசாரித்துத் தெரிந்துகொண்ட உடனே காமுவைப் பிடித்துக்கொடுத்தவனும் பொன்னுசாமியேதான் அவன் வேண்டுமென்று இவளை இன்னும் படுகுழியில் தள்ளும் பொருட்டே இக் காரியம் செய்ததாகத் தெரிந்துகொண்டார்.

உடனே போலீஸாரிடம் சென்று அவர்களிடம் விசாரித்ததில் பொன்னுசாமி தன் பெயரை மாற்றி கந்தசாமி என்று வைத்துக் கொண்டிருப்பதாயும் தான் ஓர் பட்டிக்காட்டான், பயிர் வேலை பார்ப்பவன் என்றும் சுமாராக எழுதப் படிக்கத் தெரியும் அதனுல் இந்த பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்துக்கொண்டு வந்ததாயும் கூறியிருப்பதை யறிந்தார்.

அவ்வாறு அறிந்த உடனே அவருடைய சந்தேகமும் யோசனையும் அதிகரித்துவிட்டன. அவர் நேரே போலீஸ் அதிகாரியிடம் சென்று சில முக்யமான விஷயங்களைக் கூறிவிட்டு "நான் இந்த வழக்கில் சம்மந்தப்படப்போகிறேன். எதிரிகள் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள். நான் இந்த மனிதனைப்பற்றி சந்தேகிக்கின்றேன். ஆதலால் இவனுக்கு நீங்கள் விளம்பரத்தில் கண்டபடிக்கு

வெகுமதியைக் கொடுக்கவேண்டாமென்று நான் இப்போதே எச்சரிக்கின்றேன். இதன் காரணத்தை நான் இப்போது கூறத் தயாராக இல்லை. பிறகு தானாகவே விளங்கும்'' என்று கூறினர்.

இதைக் கேட்ட அதிகாரி "நாயுடுகாரு! உமக்கும் நமக்கும் இம் மாதிரியான விஷயங்களில் பல சந்தர்ப்பத்தில் அபிப்பிராய பேதங்கள் உண்டாகி இருப்பதும் பிறகு நீர் ஜெயிப்பதும் வழக்கமாகிவிட்டது. இருப்பினும் எங்களுடைய கடமையை நாங்களும் செய்துதானே தீரவேண்டும். இந்த வழக்கிற்கும் இம் மனிதனுக்கும் என்ன வகையில் சம்மந்தம் கொண்டு புகுத்தப்போகிறீர்கள். இவனே பட்டிக்காட்டான். வழக்கு விஷயமோ வேறு. இவன் குற்றவாளியைப் பிடித்துக்கொடுத்ததனுலேயே இவனும் குற்றவாளியாகிவிடுவானே! இதென்ன வேடிக்கையாகப் பேசுகின்றீர்களே?'' என்று நகைத்தவாறு கேட்டார்.

நாயுடு.—ஐயா! உமது கேள்விக்கு தற்போது நான் பதில் கூற முடியாததற்கு மன்னிக்கவும். பிறகு என் செய்கையில் காட்ட உத்தேசிக்கிறேன். நீங்கள் உங்கள் தோரணைப்படிக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டாலுங்கூட நான் எண்ணியபடி காரியத்தை முடிக்குந் திறன் எனக்குண்டு என்பதை மறக்கவேண்டாம் என்பதைத் தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

அதிகாரி.—அஹ்ஹஹ்ஹா...மெத்த மெத்த சந்தோஷம். அப்படியே உமது சாமர்த்தியத்தையும் மறுமுறை காண விரும்புகிறேன். அந்த மனிதனுக்கு இன்று செக்கு கொடுப்பதாக வார்த்தை; ஆதலால் இன்று கொடுத்துவிடுகிறேன். நீர்தான் எப்படியும் கண்டு பிடிப்பவராயிற்றே. உமக்குப் பயமென்ன? உம்முடைய வேலையும் நடக்கட்டும்; எங்களுடைய வேலையும் நடக்கட்டும். முடிவு எப்படியோ பார்க்கலாம்—என்ருர்.

இதைக் கேட்ட நாயுடுகாரு நகைத்துக்கொண்டே "சரி. நமது சம்பாஷணை வழக்கம்போல முடிந்துவிட்டது. காரியமும் முடிந்துவிடுகிறது. நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்'' என்று கூறிவிட்டு அவ்விடம் விட்டுக் கிளம்பிவிட்டார். இவர் வீதியில் வரும்

போது ஒரு போலீஸ் சேவகன் எஜமானிடம் செல்ல நாயுடுவின் எதிரே விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தான்.

அவனைக் கண்ட நாயுடு "அப்பா! நில்லு! நில்லு! ஆள் எதிரே வருவது தெரியாது ஓடுகிருயே! என்மேல் இப்படித்தான் விழுவதா! என்ன அத்தனை அவசரம்?'' என்று மடக்கிக்கொண்டு கேட்டார். நாயுடுகாருவை அறியாதார் யாரேனும் உண்டா! இந்த சேவகன் அவரைப் பார்த்ததும் பயபக்தியுடன் வணங்கி வந்தனம் செய்துவிட்டு "எஜமானே! மன்னிக்கவேண்டும். நான் அவசரமாகச் சென்றதால் தங்கள் மீது மோத நேர்ந்துவிட்டது. அந்த நாட்டுப்புறத்தான் பணத்திற்காக வந்து வாதாடுகிருன். அதை எஜமானிடம் தெரிவிக்கச் செல்கிறேன்.'' என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

இதைக் கேட்ட நாயுடுகாரு அந்த மனிதன் யார் என்பதைக் கவனிக்கத் தொடங்கினர். வேஷம் போடுவதில் கைதேர்ந்த பக்காப் பேர்வழியான நாயுடுவே கண்டு ப்ரமிக்கும்படியாக பொன்னுசாமி அசல் நாட்டுப்புறத்தானைப்போல தலைக்கு முண்டாசும், முழங்கால் வரையில் துணியும்,நெத்தியில் முகமே தெரியாதபடி விபூதிப்பட்டையும் தோள்மீது ஓர் துணியுமாக நின்று "இதென்ன நீதி ஐயா! இண்ணிக்கிக் கொடுக்கிராண்ணு சொல்லிப்புட்டு பேசாதிருக்கிறீங்களே! பணம் எங்கேய்யா?'' என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

இதை நாயுடு தான் இருப்பது தெரியாமல் சிறிது தூரத்திலிருந்து கவனித்துக்கொண்டே நின்றுர். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு ஆள் 1000 ரூபாயிக்குச் செக்கு கொண்டுவந்து அந்த நாட்டுப்புறத்தானிடம் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக்கொண்டு சென்றுன். இதையும் நாயுடு பார்த்துக்கொண்டதோடு அந்த பொன்னுசாமியை உற்றுக் கவனித்து நன்ருக மனத்தில் பதிய வைத்துக்கொண்டார்.

பொன்னுசாமி செக்கை எடுத்துக்கொண்டு நேரே பாங்கிக்குச் சென்று அதை மாற்றி ரொக்கத்தை எடுத்துக்கொண்டு சென்றுன். நாயுடு இதைப் பின் தொடர்ந்து பார்த்துக்கொண்டே அவன் எந்த வீட்டிற்குச் செல்கிருன் என்றதைக் கவனித்து வந்தார்.

பொன்னுசாமி சிறிது தூரம் சந்தும் பொந்துமாக ஓடிச் சென்று ஓர் பெரிய வீதியில் வந்து அங்கு நின்ற ஒரு மோட்டார் காரில் ஏறிக்கொண்டு சரேலென்று போய்விட்டான். அந்தக் காரின் நம்பரை மட்டும் கவனித்துக்கொண்டு நாயுடு அம்மட்டோடு தன் னிருப்பிடம் சென்ருர். அவருடைய யோசனையும் சந்தேகமும் பல மாகிவிட்டன. அவருடைய அந்தரங்கப் புதல்வியான அம்புஜத்தி னிடம் சென்று சகல விஷயங்களையும் தெரிவித்தார்.

அறிவில் சிறந்த அம்புஜம் இதைக் கேட்டதும் ஒரு விதமான தோற்றத்துடன் கலகலவென்று நகைத்தவாறு "அப்பா! இந்த வழக்கின் அழகிற்கு ஓர் பெரிய துப்பறிபவரை வைத்துவிட்டார் களா! இதில் என்ன விஷயத்தைத் தாங்கள் கண்டு பிடிக்கப்போகி றீர்கள்?'' என்று கேட்டாள்.

நாயுடு—அம்மா! அம்புஜா! இதென்ன நீ இத்தனை அலக்ஷிய மாகப் பேசிவிடுகிருயே! இந்த வழக்கிலா சிக்கல் ஒன்றுமில்லை என்று நினைக்கிருய்! இத்தனை அனுபவம் வாய்ந்தும் உனக்கு இவ் விஷயத் தில் ஏன் இவ்வாறு தோன்றவேண்டும். வழக்கைக் கேட்பவர்கள் சர்வ சாதாரணமாகக் கூறிவிடுவதுபோல நீயும் கூறிவிட்டாயே! அம்புஜா! அந்த மனிதனைப் பார்த்தேன். அவனுக்கும் இந்த கொலைக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை என்பது போலீஸாரின் தீர்மானம். ஆனல் எனக்கு மட்டும் அப்படித் தோன்றவில்லை.

அம்புஜ—இதென்னப்பா! நானும் போலீஸாரைப்போலவே கேட்கிறேன். அந்தப் பெண்ணைக் கெடுத்துச் சந்தியில் விட்டவன் மறுபடியும் அவளைக் காணவே இல்லை. முகால்லோபம் கிடையாது. அப்படிக்கிருக்க அவனை எப்படிச் சந்தேகிக்கலாம்?

நாயுடு—எப்படியா! என் மூளைக் கெட்டிய வரையில் சொல்கி றேன். இந்த மனிதன் இவளைக் கெடுத்த பிறகு புறக்கணித்து விட்டுச் சென்ருன். அந்த ஆத்திரத்தினுல் அவனைக் காமு அவ மானப்படுத்தினுளா! அந்த கோபம் ஒருபுறம் சேர்ந்தது. பிறகு அவன் ஒரு பெண்ணுக்குப் பாடம் சொல்லும்போது அங்கு சென்று

அவர்களிடம் முறையிட்டு மீண்டும் அவன் பலிஷை ஆற்றினாள். அதுவும் சேர்ந்தது.

பிறகு அவன் ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளும் நோக்கத்துடன் வந்தானாம். அந்தப் பெண்ணால்தான் காமு காப்பாற்றப்பட்டு அவள் வீட்டிலிருந்தாளாம். அந்த சமயம் அப்பாவி அங்கு வந்தானும். உடனே காமு அவனைக் கண்டவாறு திட்டி அவனுடைய ஊழலை எடுத்துக்கூறி பஜீத் செய்துவிட்டாளாம். அது ஒரு பெரிய ஆத்திரம் பொங்கிவிட்டது. பிறகு தான் அவன் அவளை வேண்டுமென்றே பிடித்துக் கொடுத்திருக்கிறான். இதில் உள்ளே மர்மம் ஏதோ இருக்கவேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகின்றது. இதை இன்னும் சற்றுக் கிளறிப் பார்த்தால் உண்மையைக் கூறிவிடுகிறேன் பாரு!'' என்றார்.

இம்மாதிரி இவர்கள் வழக்கு சம்மந்தமாகவே பின்னும் சிறிது நேரம் பேசிக்கொண்டு முக்யமான சில விஷயங்களைக் கூறிவிட்டுப் பிறகு சென்றார். அம்புஜமும் நாயுடு கூறிய விஷயங்களை எல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டாள். அன்று நாயுடுகாரு வெளியே சென்றதும் மோட்டார்கார் நம்பரை தமது கையாளிடம் கூறி அதை விசாரித்துக்கொண்டு வரும்படியாகக் கட்டளையிட்டார்.

அந்த ஆளும் அப்படியே சென்று லைசென்ஸ் கொடுக்கும் டிபார்ட்டுமெண்டில் விசாரித்ததில் இந்த நெம்பர் இருப்பதாயும் இது ஓர் ஆங்கிலோ இண்டியன் மாதினுடைய கார் நெம்பர் என்றும் விலாசம் கஞ்சன் சாவடி 44 நெம்பர் வீடு என்றும் தகவலாக விசாரித்துக்கொண்டு வந்து நாயுடுவிடம் தெரிவித்தான்.

இதைக் கேட்ட நாயுடு உடனே அன்றே அந்த இடத்திற்குச் செல்ல நினைத்தார். ஆனால் பொழுது இரவு நேரமாகிவிட்டதாதலால் இந் நேரத்தில் தான் திடீரென்று ஆங்கிலோ இண்டியன் மாதின் வீட்டிற்கு எப்படிச் செல்வதென்று யோசித்தார். அன்று மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாதலால் அவர்கள் கட்டாயம் மாதா கோயிலுக்கு வரக்கூடும். அங்கு சென்று கவனித்துக்கொண்டிருந்-

தால் அந்த கார் அங்கு வரும். அதில் அந்த மாதையும் காணலாம் பிறகு நடப்பதைப் பார்த்துக்கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டு நேரே அம்புஜத்தை வரவழைத்து முக்யமான சில விஷயங்களைக் கூறினர்.

மறு தினம் பொழுது விடிந்ததும் அம்புஜத்தை எதிர் பார்த்துக்கொண்டே இருந்தார். நாயுடுவே கண்டு ப்ரமிக்கும் வண்ணம் அம்புஜம் அசல் ஆங்கில மாதைப்போல கவுன், ஹாட்டு, முதலியவைகளால் அலங்கரித்துக்கொண்டு கையில் ஓர் பையும், சங்கிலியால் பிணைத்த அழகிய குச்சு நாயும் பிடித்துக்கொண்டு சிரித்துக் கொண்டே வந்து நாயுடுவின் முன்பு நின்றாள்.

நாயுடு அம்புஜத்தைக் கண்டு அத்யாச்சரிய மடைந்து அவளைத் தட்டிக் கொடுத்து "பேஷ், அம்புஜா! இந்த வேஷத்தில் உன்னை என்னைத் தவிர நமது கையாட்கள் யாரேனும் பார்த்திருந்தால் கூடக் கட்டாயம் ஏமாந்து போய்விடுவார்கள் என்பது நிச்சயம். அத்தனை பொருத்தமாயும், அழகாயு மிருக்கிறது. சபாஷ்" என்று வியந்து போற்றினர்.

அடுத்த நிமிடம் நாயுடுவும் அவருடைய அந்தரங்க ஆளும் அசல் ஆங்கிலோ இண்டியர் போலவே கால் சட்டை மேல் சட்டை, ஹாட்டு முதலிய அலங்காரத்துடன் ஜம்மென்று புறப்பட்டார்கள். இம் மூவரையும் கண்ட எவரும் கட்டாயம் ஏமாந்து போகாமலிருக்க முடியாது. அத்தனை இசைந்து இருந்தது. பின் பக்கத்து வழியால் சிறிது தூரம் சென்று ஒரு வாடகை மோட்டார் அமர்த்திக்கொண்டு நேரே சர்ச்சுக்குச் சென்றார்கள்.

அம்புஜம் சர்ச்சை நெருங்கியதும் இதுகாறும் குதூகலமாகவும் சிரித்தும் மகிழ்ந்திருந்ததற்கு மாறாக அவளுடைய முகத்தில் விசனக் களை வந்து சூழ்ந்துகொண்டது. அவளுடைய தாமரை மலர் போன்ற முகம் ஒரு விநாடியில் வாடி வதங்கித் துவண்டுவிட்டது. கண்கள் குழிந்து நீரைச் சொரியவும் தயாராகிவிட்டன என்றால் அவளுடைய சாகஸமும் சாமர்த்தியமும், எத்தனை மேன்மை

என்பதைக் கூறவேண்டுமா! இந்த மாறுதலையுங் கண்ட நாயுடு மிக்க சந்தோஷ மடைந்து பின்னும் விஷயங்களை ஓதினர்.

சர்ச்சின் வாசலில் கார் நின்றது. மூவரும் இறங்கினர்கள். அனேக மோட்டார் கார்களும் குதிரை வண்டிகளும் ரிக்ஷா வண்டிகளும் வந்து வரிசையாக நின்று கொண்டிருந்தன. கால் நடையாக வரும் மனிதக் கூட்டம் எல்லையே இல்லை. ஒவ்வொரு மிஷன் இஸ்கூலிலுள்ள மாணவிகளையும், மாணவர்களையும் அந்த இஸ்கூலின் உபாத்தியாயர் அழகாக அணி வகுத்து நடத்தி யழைத்துக்கொண்டு செல்லும் காட்சி.வெகு ரம்மியமாக விருந்தது.

மாதா கோயிலுக்கு வரும் கூட்டத்தில் ஒரு பங்கு தனவந்தர்கள் இருந்தால் 2 பங்கு ஏழைகளும் நிறைந்திருந்தார்கள். எல்லோரும் சென்று மாதா கோயிலுக்குள் போடப்பட்டுள்ள பலகைகளில் வரிசையாக உட்கார்ந்தார்கள். நமது வீர சிங்கத்திற்குக் கண் முற்றும் அங்குள்ள கார் நம்பரையே நாடிச் சென்றது. அங்கு இரு வரிசையிலும் ஏராளமாக கார்கள் நின்றிருந்தன. அங்கு நாயுடு பார்த்த காரும் இருப்பது கண்டு மெத்த மகிழ்ச்சி யடைந்து அதை அம்புஜத்திற்குக் காட்டினர். பிறகு எல்லோரும் கோயிலுக்குள் சென்றார்கள்.

நாயுடு தன்னுடைய தனியாள் ஒருவனை அங்கு நிறுத்தி காரைக் காட்டி அதையும் அதன் சொந்தக்காரியையும் கவனித்துக் கொள்ளச் செய்துவிட்டு உள்ளே சென்றார். மாதா கோயிலுக்குள்ளே ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் கிழவர்களும் சமமாகக் கூடி தங்கள் கடவுளை பஜித்து வணங்கிப் பிரார்த்தனை செய்வதும்,பைபில் என்ற தமது வேதத்தைப் படிப்பதும் உண்மையிலேயே நாயுடுவுக்கும் அம்புஜத்திற்கும் அதியாச்சரியமாக விருந்தது.

எந்த மதத்தினராயின் என்ன? எம்மதமும் சம்மதமே என்பது ஒரு பெரியாரின் வாக்கு அந்தந்த மதத்தின்படிக்கு ஈசன் பல ரூபங்களும் பெயர்களும் மாற்றிக்கொண்டு காக்ஷி கொடுக்கின்றாரே யன்றி எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒருவனே யல்லவா; மூல கர்த்தன்

ஜோதி ஸ்வரூபன் ஆதிமத்யாந்த ரஹிதனுக விளங்கும் ஜகத்ரக்ஷகன் ஒருவனல்லவா ?

உலகு தந்தானும் பல்வேறுயிர் கடந்தானு முள்ளுற்
றலைவிலா வுயிர்கடோறு மங்கங்கே யுறைகின் ருனும்
மலரினில் வேறியு மேள்ளினெய்யுமாய் வழுத்த லோல்லா
அலகிருேல் புகழும் பற்றி முற்றியவரி காணத்தா.

என்று கம்பர் மொழிய வில்லையா !

கீதையில் கிருஷ்ணபகவான் தெரிவித்தபடி எந்த மதத்திலும் அவனே விளங்குகிருன்.

நீராய் நிலனுய்த் தீயாய்க் காலாய் நெடுவானுய்ச்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனு யயனுய்க்
கூரா ராழிவெண் சங்கேந் திக்கோடி யேன்பால்
வாரர யோருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே.

என்பது நம்மாழ்வாரின் வாக்கல்லவா ?

ஏசுவாயும், அல்லாவாயும், ராமனுயும், கிருஷ்ணனுயும், சங்கரனுயும், ஷண்முகனுயும், காளியாயும் வீரன் இருளன் காட்டேரி முதலிய க்ஷுத்திர தேவதைகளாயும் இன்னும் எண்ணரிய பலவிதமான ரூபங்களுடன் காக்ஷி கொடுக்கும் ஈசன் ஒருவனே யன்ருே! கரும்பின் சாற்றினுலேயே சர்க்கரை,வெல்லம்,கற்கண்டு முதலிய பல ரூபமான வஸ்துக்களைச் செய்வது போல ஒரே ஈசனின் மகிமை பல ரூபமாக விளங்குகின்றது. அடாடா! உண்மையில் இங்கு இவர்கள் என்ன திட்டமான கட்டுப் பாடுடன் ப்ரதி வாரமும் தவருமல் வந்து தம் தம் கடவுளை வணங்கித் தொழுவது மனேரம்மியமாயும் பரிசுத்தமாயுமிருக்கிறது. இந்த பக்த கோஷ்டிக்குள் சண்டையா சச்சரவா! ஒன்றுமில்லை. சமமாக வருவதும் பகவானைப் பிரார்த்திப்பதும் வீடு செல்வதுமாக இருக்கிறது. நமது கோயில்களில் இம்மாதிரி பகவத் ப்ரார்த்தனை மட்டுமில்லாது ஜனங்களுக்கு ப்ரஸாதத்தில் புத்தி சென்று விடுவதால் அவர்களில் பெரும்பாலோர் கோயிலுக்குச் செல்கின்ருர்களேயன்றி அங்குள்ள தெய்வத்தினிடத்தில் மனம் நாடுவதில்லை.

எத்தனை தளிகை சர்க்கரைப் பொங்கல், பொங்கல், புளியோதரை, ததியோதனம், சுண்டல், தோசை, வடை.........முதலிய கேள்வியும் விசாரணையும் மக்களிடத்தில் முதன்மையாகத் தாவுகின்றது. அதனால் மக்கள் அதைப் பெறுவதற்கே முயற்சி செய்வதும் அதற்காகச் சண்டையிட்டு வினியோகம் செய்பவர்களின் மேல் விழுந்து பிடுங்குவதும் ஒருவர்க் கொருவர் சண்டை செய்வதும் பெருங்குழப்பமும் கூக்குரலும் உண்டாவதும் சில சமயம் இதன் நிமித்தம் அடிதடியும் விழுவதும் அப்பப்ப......சொல்லத்திறமற்ற ரகளையும் ஆபாஸமும் நடந்து விடுகின்றன.

இந்த சண்டையின் மும்முரத்தில் சில குள்ளநரிகள் எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது போல அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்வதும் சில திருட்டு புத்திக்காரர்கள் குழந்தைகளின் நகைகளையேயோ, பெரியவர்களின் சங்கிலி முதலியவைகளேயோ கத்தரித்துக் கொண்டு ஓடி விடுகிறார்கள். என்ன ஆபாசம்! என்ன வெட்கக் கேடு! இத்தகைய மும்முறத்தில் பகவத் பக்தி எங்கு உண்டாகும்? பகவானை தரிசிப்பதையும் சிலர் அறவே மறந்து ப்ரஸாதங் கிடைத்தவுடன் ஓடி விடுகிறார்கள். இம்மாதிரி நடப்பவர்களின் நடிப்போ! பரம பக்த சிகாமணியாம்; பரம வைதீகப் பழமாம். வேத வித்தாம்.

உம்......எல்லாம் வேஷம். பகட்டு. உண்மையான பகவத் பக்தியுள்ளவர்கள் இந்தமாதிரியான சண்டைக்கும் வினியோகத்திற்கும் காக்காமல் கோயிலுக்குச் செல்வதும் பகவானை வணங்குவதும் தோத்தரிப்பதும் வீட்டிற்குச் செல்வதுமாக எத்தனையோ பெயர்களிருக்கிறார்கள். அவர்களுக்கு முக்கியம் சுவாமி தரிசனமேயன்றி வினியோகங்களில்லை. உண்மை பக்தர்கள் எந்த மதத்திலும் எந்த கோயிலிலும் இருக்கிறார்கள். எப்படி வணங்கினாலும் எல்லாம் அந்த முழு முதற் கடவுளுக்கே அர்ப்பணம்'' என்று நாயுடுகாரு பல விதமாக தமக்குள் எண்ணியவராய் தானும் ஒரு பைபிளைப் பிரித்துப் படித்துக் கொண்டு தொழுபவர் போலப் பாசாங்கு செய்தார்.

சுமார் இரண்டு மணி நேரமாயிற்று. அனேகர் தம் தம் ப்ரார்த்தனையை முடித்துக் கொண்டு செல்லவாரம்பித்தார்கள். நாயுடுவுக்கு

நினைவு முற்றும் காரின்மீதே இருந்தது. அந்த காரின் சொந்தக்காரி வந்த உடனே தனக்கு ஒரு பிகில் கொடுத்து சைகை செய்யும்படி யாகத் தன் ஆளிடம் சொல்லி இருந்ததால் அதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதோடு அம்புஜத்திற்கு அங்குள்ள சித்திரங்களைச் சுட்டிக் காட்டுவதும் 'அது எப்படி இருக்கிறது. இது எப்படி இருக்கிறது. இந்த புஷ்பச் செடியைப்பாரு எத்தனை அழகாக இருக்கிறது?'' என்று அவள் தோளைப் பிடித்து ஆட்டி ஆட்டிக் காட்டுகிறார். அம்புஜமோ அதையொன்றையும் கவனியாமல் தன்போக்காக அங்குள்ள கடவுளையே பார்த்த வண்ணம் நாயுடு தன்னைத் தீண்டுவதைக் கண்டு அருவருப்பது போல முகக் குறியில் காட்டி தேகத்தை நெளித்துக் கொண்டு அப்புறம் நகர்ந்து செல்கிறாள். கண்ணீர் பெருகுகின்றதைத் துடைக்கின்றாள். பெரு மூச்சு விட்டு விம்முகின்றாள்.

கூடவந்துள்ள மற்றொரு சிறியவன் அடிக்கடி அம்புஜத்தை நோக்கி மிரட்டுவது போல முழிப்பதும் கையை ஆட்டி ஆட்டி ஏதோ சொல்வதும் நாயுடுவைக் காட்டிப் பேசுவதும் செய்கிறான். இதற்கும் அம்புஜம் பரிதாபகரமாக பகவானையே பார்த்துப் புலம்புகின்றாளேயன்றி வேறு ஏதும் செய்யவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் அனேகர் கலைந்து விட்டார்கள்.

நாயுடுவும் அந்த மனிதனும் சிறிது தூரத்தில் சென்று அம்புஜத்தைச் சுட்டிக் காட்டி ரகஸியமாக ஏதோ பேசுகிறார்கள். அச்சமயம் அம்புஜம் திடீரென்று மாதா சிலையருகில் சென்று மண்டியிட்டு உட்கார்ந்து. "ஏ மாதாவே! ஏ கர்த்தனே! ஏ தேவனே! என்னுடைய பரிதாபம் உன் செவியில் படவில்லையா? உன்னுடைய மனது இளகமாட்டாதா! என்னுடைய ஆயுள் இப்படித்தான் பாழாகிவிட வேண்டுமா! என்னுடைய முடிவு இப்படித்தானா! நான் இனி சகிக்க மாட்டேன். நான் தற்கொலை செய்து கொண்டுதான் உயிர்விட வேண்டும்.

என்னை கேவலம் ஏழ்மையில் பிறப்பித்ததனாலன்றோ என் கதி இப்படியாகிவிட்டது. எனக்கு கொஞ்சம் செல்வமிருந்தால் என்

னிஷ்டப்படிக்கு நானும் ஓர் மகாராணியாக வாழ்வேனல்லவா! அந்தோ! இந்த கிழவனைப் பார்க்கும் போதே என் மனம் என்னை மீறி வெறுக்கின்றதே! இந்த நாற்றத்திற்கா நான் பெண் பிறந்தேன். ஏ தேவா! என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற ஒரு உபாயமும் செய்யமாட்டாயா! என்னுடைய ஒரே அண்ணனின் பொருட்டு நான் என் வாழ்வைப் பாழ் படச் செய்து விடுவது உனக்குத் தருமமா!'' என்று இவள் ஏதோ புலம்பிக் கொண்டே சொல்லி முடிப் பதற்குள் நாயுடுவுடன் வந்த ஆள் திரும்பி வந்து அம்புஜத்தை விழித்துப் பார்த்து மிறட்டி இழுத்தான்.

அம்புஜம் பயந்தவள்போல நடுங்கி மிரள மிரள விழித்தவாறு நின்றாள். அவன் இவளை எதற்கோ உடன் படும்படியாகக் கேட் கிறான். அம்புஜம் பயந்து நடுங்கியபடியே "ஊ ஹூம்...மாட்டேன் ...முடியாது. என்னை மன்னிக்க வேண்டும்.'' என்று கெஞ்சுவது போலக் கேட்டுக் கொண்டு அம்மனிதனை மண்டியிட்டு வணங்கு கிறாள்.

மீண்டும் நாயுடுவும் அம்மனிதனும் சற்று தூரத்தில் சென்று ஏதோ ரகஸியம் பேசிக் கொண்டார்கள். அச்சமயம் அம்புஜம் மீண்டும் முன் போலவே கடவுளை ப்ரார்த்தனை செய்தாள். இம்மாதிரி இரண்டு மூன்று முறை நடந்தது. அங்கு ப்ரார்த்தனை முடிந்து அனேகர் எழுந்து செல்கிறார்கள். ஆனால் இந்த காட்சியைப் பலர் கண்டு தமக்குள் குசு குசு வென்று பேசிக் கொள்வதும் சற்று நின்று பார்ப்பதும் பிறகு செல்வதுமாக இருக்கிறார்கள்.

கும்பல் பெரும்பாலும் கலைந்துவிட்டது. எண்ணிக்கையில் அடங்கும்படியாகச் சிலரே அங்கு நின்றார்கள். அவர்கள் இரண்டு மூன்று பெயர்கள் இந்த காட்சியை இமை கொட்டாது கவனித் தார்கள் என்றாலும் எதிரே வந்து விசாரிக்கவோ, தைரியமாகக் கேட் கவோ துணியவில்லை. தியங்கித் தியங்கி நின்றார்கள். இதற்குள் நாயுடு செல்வதற்குக் கிளம்பி விட்டார். அம்புஜமும் தலையைக் குனிந்தவாறே சென்றாள்.

வீதியில் வந்ததும் அநேகமாக எல்லா மோட்டார்கார்களும் போய் விட்டன. இரண்டொன்றே மிச்சம் இருந்தன. அந்த கார்களில் நாயுடு பார்த்த நம்பர் காரும் நின்றது. இன்னும் கார் இருப்பது பற்றி அவர் ஆச்சரியமடைந்தார். இக் காரின் சொந்தக்காரர் யார் என்பதை அறிய அங்குள்ள க்ரோட்டன்ஸ் பக்கமாக உலாவினர்.

இவர் பார்த்த நம்பர் வண்டியில் வயது முதிர்ந்த தொண்டு கிழவர் ஒருவரும் 5 வயது சிறுவன் ஒருவரும் அமர்ந்தார்கள். கார் போய் விட்டது. நாயுடுவுக்கு இதைக் கண்டதும் சப்பென்று ஆய் விட்டது. "இதென்னடா! ஏமாற்றமாகி விட்டதே!" என்று சிறிது தியங்கினர். அதே சமயம் அம்புஜமும் சிறிது சலிப்புற்று ஒரு புற மாக நிற்கையில் தடபுடலான அலங்காரப் பேர்வழி யொருவன் அங்கு மிங்கும் சற்று உலாவினன்.

நவ நாகரிக கோலத்தில் முதிர்ந்த அந்த மனிதனும் கூட விருந்த கிழவியும் அம்புஜமிருக்கும் பக்கம் வந்தார்கள். கிழவி மெல்ல அம்புஜத்தின் பக்கம் வந்து......அம்மா நீ மிஸஸ் ஸ்மித்தி னுடைய பெண் லிலி தானே! உன்னை அப்போதிலிருந்து பார்க் கிறேன். நீ ஏன் விசனித்துக் கண்ணீர் வடிக்கிறாய்? ஏன் இவர்கள் உன்னை மிறட்டுகிறார்கள்?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அம்புஜம் நாயுடுவின் முகத்தை ஜாடையாகப் பார்த்தாள். அவர் ஏதோ சைகை செய்தார். உடனே அம்புஜம் நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே, "பாட்டீ! நீங்கள் கேட்கும் லில்லி நானல்ல. என் பெயர் ரோஸி.என் தாயார் இறந்து விட்டாள். எனக்கு எத்தனையோ விசனம் புலம்புகிறேன்'' என்று சலிப்புடன் பதில் கூறினள்.

கிழவி :—அப்படியா! நீ லில்லி இல்லையா! எனக்கு வயதாகி விட்டது. கண்கள் சற்று மங்கி இருப்பதால் சரியாகத் தெரிய வில்லை. உன் சாயல் லில்லியைப் போலவே இருந்தது. அதனல் கேட்டேன். வித்யாசமாசு நினைக்காதேயம்மா! நான் தள்ளாதவளா கையினல் தடுமாறி விட்டேன்.

அம்பு :—ஐயோ! இதற்கென்ன பாட்டி வித்யாசம்? ஆளைப் போல ஆள் இருப்பதில்லையா என்ன. இது சகஜந்தானே! உன்னைப் பார்த்தால் கூட எனக்கு என் பாட்டியின் ஞாபகம் வருகிறது. உன்னைப்போலவே தான் என் பாட்டியின் சாயலும் இருக்கும் அதை நான் சொல்லக் கூடாதா என்ன.?

கிழவி :—அம்மா! மெத்த சந்தோஷம். உன் பாட்டியைப்போல சாயல் இருந்தாலும் நான் பாட்டி என்ற பட்டம் பெறும் பாக்யம் செய்யாத மகாபாவி. எனக்கு ஒரு பெண் இருந்தாள்; அவளும் இறந்தாள். நான் ஒண்டிக் கட்டைதான்: இந்த கோயிலுக்கு வருவதும் கடவுளைப் பஜிப்பதும் வீட்டிலிருப்பதுந்தான் என் வேலை. என்னை ஈசன் செல்வத்திலும் பிறப்பிக்கவில்லை. நான் பரம ஏழை.

அம்பு :—பாட்டி! கடவுளுக்கு ஏழை என்றும் பணக்காரரென்றும் வித்யாசம் கிடையாதே! நானும் உன்னைப் போல பரம ஏழைதான். அதோடு திக்கும் அற்ற அனாதை.........உம்...... அவரவர் செய்த பலன் போலல்லவா யாவும் கிடைக்கும். உன் பாடு தற்சமயம் நிம்மதி என்று நான் கூறுவேன். என் பாடு அப்படி இல்லையே!

கிழவி :—அதென்ன அப்படிக் கூறுகிருய். உன்னைப் பார்த்தால் பச்சைக் கிளிபோலவிருக்கிருய். சிறு பிராயம். இனிமேல் தான் உனக்கு சகல போக பாக்யமும் இருக்கிறது. இதற்குள் சலிப்பது நன்ருக இருக்கிறது! உனக் கென்னம்மா குறைவு ? ஏன் இப்படி வருத்தப் படுகிருய்? கண்ணீர் ஏன் பெருகுகின்றது ?

அம்பு :—பாட்டீ! கர்த்தன் என் தலையில் வருத்த மனுபவிக்க வேண்டுமென்று எழுதி விட்டார். இனி நான் புலம்பினுல் என் வருத்தம் தீருமா! முட்டிக் கொண்டால் தான் விசனம் ஆறுமா! என்னுடைய தாயார் இந்த கஷ்டங்களைக் கண்டு சகிக்கமாட்டாது விரைவில் பரலோகம் போய் விட்டாள்—என்று இவள் கூறி முடிப்பதற்குள் நாயுடுவின் ஆள் அம்புஜத்தை அதட்டி வரும்படியாக அழைத்தான்.

உடனே அம்புஜம் பயந்து கொண்டு அலறியவாறு “பாட்டி! நான் சென்று வருகிறேன்.” என்று கூறிக் கொண்டே ஓடவாரம்பித்தாள். அதைக் கண்ட கிழவி “அம்மா! இனி உன்னை எப்போது பார்ப்பது? உன்னைப் பார்த்தது முதல் உன்மீது எனக்கேதோ மனத்தில் சிறிது அன்பு உண்டாகிறது. எங்கள் வீட்டிற்கு வரு

கிறுயா! நான் உங்கள் வீட்டிற்கு வரட்டுமா!...இதோ என்னுடைய கார் வந்து விடும்; அதிலேயே நீயும் போகலாம்.'' என்று கூறித் தடுத்தாள்.

அம்புஜம் "பாட்டி! எனக்குக் காரும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். எங்கள் காரே இருக்கிறது. என் அண்ணன் திட்டுவான் நான் போகிறேன்'' என்று ஓடிவிட்டாள். அம்புஜம் காரில் ஏறிச் செல்லும் வரையில் கிழவி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதே சமயம் நாயுடு முதல் நாள் பார்த்த நம்பருள்ள கார் மீண்டும் அங்கு வந்தது. அந்த தோட்டத்தில் ஒரு புறம் புஷ்பச் செடியினருகில் நின்று பேசிக் கொண்டிருந்த ஒரு யுவதியும் யுவகனும் சந்தோஷமாகப் பேசிச் சிரித்துக் கொண்டே அந்த காரில் ஏறிச் சென்றார்கள்.

இதை வெகு ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார். வேறொரு மோட்டார் வந்ததும் அம்புஜத்துடன் பேசிய கிழவியும் கூடயிருந்த மனிதனும் ஏறிக் கொண்டு போய் விட்டார்கள். நாயுடுவும் அம்புஜமும் பிறகு நேரே போய் விட்டார்கள். அன்று மாலை மீண்டும் இதே மாதிரி மாதா கோயிலுக்கு வந்து ப்ரார்த்தனை செய்தார்கள். அப்போது அன்று காலையில் வந்த கிழவியும் அதே மனிதனும் அங்கு வந்தார்கள்.

அம்புஜம் காலையில் செய்தது போலவே பிரார்த்தனை செய்து வேண்டிக்கொண்டிருக்கையில் அக் கிழவி அவனருகில் வந்து "அம்மா! நீ இங்கு வருவதை நான் தற்செயலாகப் பார்த்தேன். அதனால்தான் மீண்டும் இங்கு வந்தேன். காலைமுதல் எனக்கு என் வீட்டில் உன்னினைவாகவே இருந்தது. நான் காலையில் செல்லும் அவசரத்தில் அழைக்க மறந்துவிட்டேன். இதோ இருக்கும் இவன் எனது கடைசீ தம்பியாவான். இவனுக்கு 35வது பிறந்த நாள் வருகிறது அது நாளைய தினம் கொண்டாடப் போகிறோம். அதற்கு நீயும் உன் அண்ணனும் கட்டாயம் வரவேண்டும். நாங்கள் மிக்க தடபுடலாக செய்ய சக்தியற்றவர்கள். எங்களுடைய சக்திக்குத் தக்கபடி செய்யத் தீர்மானித்திருக்கிறோம். ஆதலால் அவசியம் வரவேண்டும்'' என்று அழைத்தாள்.

இதைக் கேட்ட அம்புஜம் மெல்லிய குரலில் கிழவியை நோக்கி "பாட்டி! என்னுடைய இஷ்டமும் சுவாதீனமும் ஏதுவுமில்லை. நாளைய தினந்தான் எனக்குக் கல்யாணம், எனது வாழ்வு முடியும் நாள் என்று கூறலாம். அதோ இருக்கும் கிழவரைத்தான் மணக்கவேண்டுமாம். இதோ நிற்கும் இவர்தான் என்னுடைய சகோதரன். எனது சகோதரன் ஒரு கம்பெனியில் வேலையிலிருக்கிறன். அந்த கம்பெனியின் சொந்தக்காரன் இந்தக் கிழவன்.

என் போதாக்காலக் கொடுமையினால் என் அண்ணன் அந்த கம்பெனி பணத்தில் கொஞ்சம் கையாடிவிட்டான். அது எஜமானுக்குத் தெரிந்துவிட்டதாம். அதற்காக எஜமானர் என் அண்ணனைக் கண்டித்து "பணத்தை உடனே வைக்கிறாயா! அன்றி உன்னை கோர்ட்டில் மாட்டிவிடட்டுமா?'' என்று பயமுறுத்தினாராம். என் தமயன் பரம ஏழையாதலால் பணமே கிடையாது. திருப்பிக் கொடுக்க வேறு வழி இல்லை. கிழவருக்கு என்மீது ஆசை இருப்பதை யறிந்து என்னை இந்த பணத்திற்காக அவருக்கு விவாகம் செய்து கொடுத்துவிடுவதாக வாக்குக் கொடுத்துவிட்டானும்.

என் மனம் இசையவில்லை எனினும் என்னுடைய அண்ணன் பொருட்டு நான் என்னை த்யாகம் செய்யவேண்டியதாகிவிட்டது. இல்லையேல் என் அண்ணனுக்கு பெரிய ஆபத்து நேரும். க்ரிமினல் கேஸில் அவன் விபரீத தண்டனை யடையவேண்டியதாகும். ஆதலால் நான் புலம்புகிறேன். கர்த்தனை வேண்டுகிறேன். என் அண்ணனுக்கு எந்த விதத்திலாவது பணம் கிடைத்துவிட்டால் என் கஷ்டம் நிவர்த்தியாகிவிடாதா! என்று பிரார்த்தனை செய்கிறேன். என்ன செய்வேன் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால்தான் நான் விவாகத்திற்கு இசைந்துவிட்டேன்.'' என்று கண்ணீர் பெருகக் கூறினாள்.

இதைக் கேட்ட கிழவி பெரிய ஆச்சரியமும் அனுதாபமும் அடைந்து "ஐயையோ! பச்சைக் கிளிபோன்றுள்ள உன்னையா இப்பாழுங் கிழத்திற்குத் தள்ளுவது? இந்த துர் வழக்கம், அனியாயம் இந்துக்களிடத்தில் இருக்கிறதென்றால் நம்முடைய சமூகத்திலும் ஏராளமாகப் பரவிவிட்டதே! அடாடா! பெண்ணே! இதோ பாரு. நீ விசனப்படாதே! நான் உனக்குச் சொந்த பாட்டிமாதிரி நினைத்துக்கொண்டு இப்படி வா! உனக்கு நான் சரியான ஓர் ரகஸிய வழி சொல்லுகிறேன். அதனால் நீ தப்பிப் பிழைக்கலாம். உன் மனத்திற்கிசைந்த இளம் வாலிபனை மணந்து வாழலாம். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்டவுடன் அம்புஜம் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்து முகத்தில் தெம்பான களை உண்டாகியதுபோலப் பிரஸன்னமாக வைத்துக்கொண்டு "பாட்டி! பாட்டி! நான் உன்னை முற்றிலும் நம்புகிறேன். நீ இந்த சமயம் என்னைக் காப்பாற்றினால் போதும். நான் நீ சொல்கிறபடியே கேட்கிறேன். நீ கட்டாயம் எனக்குச் சொல்லு'' என்றாள்.

கிழவி மெத்த சந்தோஷமடைந்து "அம்மா! நீ இப்போது என்னோடுகூட வீட்டிற்கு வா! நான் உனக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கச் செய்து உனக்குச் சரியான வரனையும் தேடி விவாகத்தைச் செய்விக்கிறேன். வாம்மா!'' என்றழைத்தாள். இதற்கு

அம்புஜம் என் அண்ணனையும் நான் உடன் அழைத்துவருகிறேன். அவனிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பிய பிறகு கிழவன் தொலைந்துவிடுவான். அதன்மேல் விவாகத்திற்குப் பிரயத்தனம் செய்யலாம்'' என்றாள்.

கிழவி அதற்குச் சம்மதப்பட்டாள். உடனே அம்புஜம் தன் அண்ணனை அழைத்து அவனிடம் இவ்விஷயத்தைச் சொல்லுவது போல நடித்து அவனையும் அழைத்துக்கொண்டு கிழவியோடு அவளது காரில் ஏறிக்கொண்டாள். இதற்குள் கிழவர் வெகு ஆத்திரத்துடன் இவர்கள் முன்பு வந்து "ஓகோ! இந்த ஏமாற்று பேரம் செய்வதில் நான் ஏமாறமாட்டேன். என் பணத்தை முதலில் கீழே வையுங்கள்.'' என்று கூச்சலிட்டார்.

இது கேட்ட அம்புஜம் "பாட்டீ! இவரும் கூட வரட்டும். பணத்தைக் கொடுத்துத் துலைத்துவிடலாம். பிறகு தொந்திரவு இல்லாமலிருக்கும். ஏறுங்கள் தாதா!'' என்றாள். கிழவி ஏதும் பேசாமல் ஒப்புக்கொண்டாள். வண்டி ஓடத் தொடங்கியது. சுமார் அரை மணி நேரம் சென்றதும் ஓர் பெரிய தோட்டத்தில் புகுந்து பங்களா வாசலில் நின்றது. கிழவி இறங்கி மூவரையும் அழைத்துக்கொண்டு ஒரு பந்தோபஸ்தான அறைக்குச் சென்று "உம் கதவைச் சாத்தடா! வென்று ஆக்ஞாபித்தாள். கதவு பட்டாரென்று சாத்தப்பட்டது.

உடனே கிழவி தனது கைகளைக் கொட்டிக்கொண்டு நகைத்தபடி "கூட்டில் சரியான பக்ஷிகள் அடைபட்டன. பணமா! இனி நீங்கள் திரும்புவதா! பேஷ்!'' என்று கூறிக்கொண்டே தன் வேஷத்தைக் களைந்தாள். உடனே கிழவி ஓர் ஆண் உருவமாக மாறி வீரத்தோடு எதிலே நின்றான். இதற்கென்றே காத்திருக்கும் சிங்கங்களா இந்த பூச்சி மிரட்டலுக்குப் பயப்படும்? நாயுடு பெரிதாக நகைத்துக்கொண்டே "இந்த பெரிய வேட்டைப் புலியைப் பிடித்து நசுக்கத்தான் நான் எதிர்பார்த்திருந்தேன். இனிமேல் உன் ஆட்டங்களும் நாடகமும் நடக்க முடியாது தெரியுமா! நான் பைத்தியக்கார சுப்பனல்ல. கையில் ஆயத்தமாக வைத்திருந்த வலையை மாதா கோயிலில் வீசவே எண்ணி வீசி இந்த மீனைப் பிடித்தேன். நான் யார் பார்த்தாயா! என்று தன்னுடைய உடையையும், வேஷத்தையும் களைந்துவிட்டு நின்று மார்பு தட்டி புன் முறுவல் செய்தார். அம்புஜமும் மற்றவனும் கலகலவென்று நகைத்தார்கள்.

அதுவரையில் தான் ஏதோ பெரிய வெற்றிச் சூரியனைக் கண்டுவிட்டதாக எண்ணி இருமாப்பு கொண்டிருந்த அந்த ஆசாமி இந்த வார்த்தையைக் கேட்டதும் நாயுடுவைப் பார்த்ததும் ஹா!... துப்பறியும் நாயுடுவா!......ஐயோ! மோசம் போய்விட்டேனே! ஈசா!'' என்று கதறிப் பதறித் தம்பித்துப்போய்விட்டான்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS,

# தி யுனைடெட் இந்தியா

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : மதராஸ்.) (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

| | | |
|---|---|---|
| அமுலிலிருக்கும் பாலிஸிகள் | ரூ. **287** | லக்ஷத்துக்கு மேல் |
| வருஷ வருமானம் | ரூ. **18** | லக்ஷத்துக்கு மேல் |
| கம்பெனியின் சொத்து மதிப்பு | ரூ. **68** | லக்ஷத்துக்கு மேல் |
| இதுவரையில் பாத்தியஸ்தர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை | ரூ. **22** | லக்ஷத்துக்கு மேல் |

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்.
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது
வருஷங்களுக்கு
மேலாக
முன்னணியில்
நிற்கின்றது.




மற்றவைகள்
இதைப்
பின்பற்றித்தான்
வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

---

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.